காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

27—2—72

★

உள்ளே.....

வாழ்க்கையெனும் ஓடம்!
(தலையங்கம்)

இன்றைய பகைவர் நாளைய நண்பர்!
(அமரர் அண்ணா)

அண்ணாவின் மறுபெயர் இசை!
(ஆய்வுக் கட்டுரை)

பிச்சைக்காரி!
(சிறுகதை)

விலை 25 காசு

உலக அரங்கில்

உலக அரங்கில் இன்று எத்தனையோ அற்புதங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன! அந்த அற்புதங்களிலெல்லாம் தலையாயதாக இருந்துகொண்டிருப்பது, அமெரிக்க அதிபர் நிக்சன், செஞ்சீனத் தலைநகருக்கு வருகை புரிந்திருப்பதுதான் என்று உலகெங்கிலுமுள்ள அரசியல் விமர்சகர்கள் கருத்தறிவித்துக் கொண்டிருக்கிறார்கள்!

அதிபர் நிக்சனது சீனச் செலவு குறித்து ஒரு ஆண்டுக்கு முன்பாகவே திட்டமிடப்பட்டு, உலகத்து ஏடுகள் இதழ்கள் அனைத்துக்கும் பரபரப்பான செய்தி தரபபட்டு விளம்பரப் படுத்தப்பட்டது.

முதன்முதலாக இச்செய்தியை அமெரிக்கா வெளியிட்டபோது, நிலாத் தரையில் கால் வைத்த முதல் மனிதனது வெற்றிக்கு எவ்வளவு முக்கியத்துவமும், மகிழ்ச்சியும் இருக்க முடியுமோ, அவ்வளவு முக்கியத்துவத்துடனும் மகிழ்ச்சியுடனும் அமெரிக்க வெள்ளை மாளிகை காணப்பட்டது.

நாட்கள் நைந்து, சுமார் 62000க்கும் மேற்பட்ட கிலோ மீட்டர்களைக் கடந்து, அதிபர் நிக்சன் இந்தக் கிழமை 20-ஆம் நாள் சீன மண்ணிலே கால் பதித்திருக்கிறார்.

தம்முடன் அவர், தனது துணைவியாரை மட்டுமல்லாமல், தனது சீனச் செலவு குறித்த செய்திகளை உலகெங்கும் தாரை தப்பட்டையுடன் முழங்கச் செய்வதற்காகவே புகழ் பெற்ற 87 செய்தி இதழ்களின் நிருபர்களையும் அழைத்துக் கொண்டு போய் இருக்கிறாராம்!

ஒரு மனிதனது இதயத்தில் எண்ணம் ஒன்று பிறந்து அது செயல்படுவதற்காக என்னென்னவோ தகிடுதத்தங்களையெல்லாம் செய்யவேண்டி இருப்பது மட்டுமல்ல; அது நடைபெற்று முடிந்த பிறகு தனக்குக் கிடைக்கப்போகும் பெருமை — இன்பம் குறித்து எல்லையற்ற மனக் கிளர்ச்சியும் இருக்கும் என்று அனுபவசாலிகள் கூறுகிறார்கள்.

கொள்கைகளில் எதிரும் புதிருமாக இருக்கின்ற இரண்டு பெரும் வல்லரசு நாடுகளின் அதிபர்கள், நாள் குறித்துக்கொண்டு ஒருவரையொருவர் சந்திக்கப் போகிறார்கள்! இருவரது இதயத்திலும் எவ்வளவு கிளர்ச்சியும் மகிழ்ச்சியும் இருக்கும்!

எண்ணிப் பார்த்தால் தொலை தூரத்தில் இருக்கின்ற யாரோ ஒருவனுக்குக்கூட இன்பமாகத்தான் இருக்கும். நிக்சனுக்கு மட்டும் இருக்காதா என்ன? மனம் நிரம்பிய மகிழ்வுடன்தான் சீனத் தலைநகராம் பீகிங்குக்கு வருகை தந்திருக்கிறார்.

இந்த வருகையைக் குறித்து இந்திய ஆங்கில ஏடொன்று **'Poor publicity in peking"** என்ற தலைப்பில்

> ".........Preparations in the Chinese Capital however, so for have appeared vertually non-existanee for the president's visit which is only a few hours away.
> A Lone announcement is all that has appeared in the chinese press until now about Nixon's visit."

என்று எழுதிக் காட்டியிருக்கிறது.

செய்தியின் தலைப்பு "மிக எளிய விளம்பரம்" என்பது. அதற்கேற்ப அமெரிக்க அதிபரின் சீன வருகை குறித்து, அவரது பாதங்கள் செம் மண்ணில் பாவிய சில மணி நேரங்களுக்குப் பிறகுதான் செய்தியேடுகளில் சுருங்கிய அளவுக்குக் காணப்பட்டன என்று செய்தி தந்திருக்கிறது அந்த ஏடு.

வேதனையாகத்தானிருக்கிறது படிப்பதற்கு!

நிக்சனுடன் வருகை தந்துள்ள செய்தியாளர்களுக்கும் படரேடியோக்காரர்களுக்கும் வியப்பாக மட்டுமல்ல; வேதனையாகவும்கூட, அத்துடன் நெருக்கடியான நிலைமையும் ஏற்பட்டிருக்க வேண்டும்!

மாபெரும் குரலில் 'பராக்' கொடுத்துவிட்டு பூனையை இழுத்துக்கொண்டு வந்து சர்க்கஸ்காரன் வேடிக்கை காட்டினால் சிரிப்பு வராமலா இருக்கும்!

இது அப்படியல்ல! எவ்வளவு நம்பிக்கையுடன், விருப்பத்துடன் செய்தியாளர்களையும் டெலிவிஷன்காரர்களையும், போட்டோ கிராபர்களையும் நிக்சன் அழைத்து வந்திருக்கிறார், தமக்கு சீன மண்ணிலே கிடைக்கப்போகும் வரவேற்பையும் சீரையும், சிறப்பையும் ஏடுகள், இதழ்கள், டெலிவிஷன்கள் மூலம் தம் நாட்டுக்கு விளம்பரம் செய்ய வேண்டுமென்பதற்காக!

வந்தவர்கள், அவர்கள் கண்ட காட்சியை அப்படியே படமாக்கியும், செய்தியாக்கியும் தந்தால், அமெரிக்க ஏடுகள் இந்திய ஏட்டின் தலைப்பைவிட இன்னும் மோசமாக அல்லவா தலைப்பிட்டுச் செய்தி தர வேண்டியிருக்கும்!

அண்மையில் எதியோப்பிய நாட்டு மன்னர் செஞ்சீனாவுக்கு வருகை தந்திருந்தார். அவருக்குத் தரப்பட்ட வரவேற்பு மிக மிக ஆடம்பரமாகவும் மகிழ்ச்சி தரத்தக்கதாகவும் இருந்ததாம்!

அந்த அளவுக்குக்கூட இந்த நிக்சனுக்குத் தரவேண்டாம், அதைப் போலவாவது கொடுத்திருக்கலாமே! என்று அந்த செய்தியாளர்கள் தம்முள் குறைபட்டுக் கொள்ளாமலிருந்திருக்க முடியுமோ?

பிரமாண்டமான ஏற்பாட்டோடு வருகிறார் அமெரிக்க அதிபர்! விமான நிலையத்துக்கு! அங்கே அவரை வரவேற்க வெளிநாட்டு ராஜதந்திரிகள் கூட யாரும் அழைக்கப்படவில்லையாம்!

15 நிமிட நேரத்துக்குள் வரவேற்பு வைபவம் முற்றுப் பெற்றுவிட்டதாம்! இந்த வரவேற்பில் தவிர்க்க முடியாமல் தட்ட முடியா

(4-ஆம் பக்கம் பார்க்க)

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 13 அறுமாத சந்தா ரூ. 6-50

மலர் 8 | 27—2—72 | இதழ் 33

வாழ்க்கையெனும் ஓடம்....

மதிப்புக்குரிய கோவை பஞ்சாலைத் தொழிலாளர்களது கிளர்ச்சி வடிவம், வேறு வேறு திசை நோக்கிப் போகத் தொடங்கிவிட்டது.

இப்படி ஒரு நீடித்த கிளர்ச்சி இருக்க வேண்டும் என்பதிலே தமிழ்நாட்டு அரசியல் வணிகர்களுக்கு தீராத தாகம் இருப்பதனை உணர முடிகிறது.

துணைக்கண்டத்தில் எத்தனை எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன.

என்றாலும் கோவை தொழிலாளர்களது பிரச்சினை அனுதாபத்துடன் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றுதான் என்பதிலே இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை.

கோவைத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற பிரச்னைகளைப் போலவே, துணைக் கண்டததில் மத்திப அரசு கொடுத்திருக்கின்ற தகவலின்படி ஆறு மாநிலங்களில் உள்ள பல்வேறுபட்ட தொழிலாளர்களுக்கும் பிரச்னைகள் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஆந்திரப் பிரதேசத்தில் 647 தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன.

கர்னாடக மாநிலத்தில் 871 தொழிற்கூடங்கள் மூடப்பட்டிருக்கின்றன.

மேற்கு வங்கத்தில் 531 தொழிலகங்கள் பூட்டப்பட்டிருக்கின்றன.

கம்யூனிஸ்டுகளது ஆட்சிலுள்ள கேரளாவில் மட்டும் 293 தொழிலகங்களுக்குப் பூட்டுப் போடப்பட்டுள்ளது.

இதுவரையில் சுதந்திரா கட்சிக்காரர்களது கையிலிருந்த ஒரிசாவிலே 66 தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன.

தமிழ் நாட்டில்தான் மிகக் குறைந்த அளவுள்ள எண்ணிக்கை 22 என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த ஆறு மாநிலங்களிலும், இன்று நேற்று என்று அல்ல; 1969 முதல் 1971 இறுதி வரையிலும் கூட அப்படியேதான் மூடுண்டு கிடக்கின்றன.

இவற்றிலே, ஆந்திராவில் மூடுண்டிருக்கும் 647-இல் இதுவரையில் 88 தொழிற்சாலைகள் மட்டுமே இயங்கத் தொடங்கி இருக்கிறதாம்!

இதுபோல் கர்னாடக மாநிலத்தில் 871-இல் 268 மட்டுமே செயல்பட ஆரம்பித்திருக்கிறதாம்!

மேற்கு வங்கத்தில் 531-இல், 195 மட்டுமே புத்துயிர் பெற்றிருக்கிறதாம்!

கம்யூனிஸ்டுகளது கேரளாவில் 293-இல் 109தான் செயல்படச் செய்ய முடிந்திருக்கிறது.

சுதந்திரா வசமிருந்த ஒரிசாவில் 66-இல் வெறும் ஒற்றை எண்ணாக 7தான் திறக்கப்பட முடிந்ததாம்!

தமிழ்நாட்டில் தொழிற் தகராறுகள் காரணமாக மூடப்பட்டுள்ள 22-இல் இதுவரையில் புணர் வாழ்வு பெற்று இயங்கத் தொடங்கியுள்ளவை 6. இப்போது மத்திய மாநில முயற்சிகளால், விரைவில் கையகப் படுத்தி, திறக்கப்படும் வாய்ப்பினைப் பெற்றிருப்பவை 6, ஆக 12 என்ற எண்ணை எட்டிவிட்டது. மீதமிருப்பவை 10தான்!

பிற ஐந்து மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழ் நாட்டின் நிலை நூறு சத வீதம் மேல் என்று சொல்லாமலிருக்க முடியாது.

என்றாலும், இந்தத் தொழில் பிரச்னை குறித்து அளவுக்கும் அதிகமான ஆர்ப்பாட்டங்கள் தமிழகத்திலேதான் அளவுக்கும் அதிகமாக இருக்கின்றன என்பதையும் சொல்லாமலிருக்க முடியவில்லை.

இந்தத் தகராறுகளைத் தலைப் பிரச்னையாய்க் கொண்டிருக்கும் அருமை கம்யூனிஸ்டு நண்பர்கள், கொஞ்சம் கேரளாவையும், மைசூரையும், ஆந்திராவையும் எட்டிப் பார்த்தால், தமிழ்நாட்டுப் பிரச்னையை, இவ்வளவு பூதாகாரமான தாக்க நினைப்பார்களா என்று எண்ணிப் பார்ப்பது தவறாகாது.

இந்திரா காங்கிரசார், கண்களை அகலத் திறந்து ஆந்திராவில் மூடப்பட்டுள்ள கதவுகளின் எண்ணிக்கையினை, மறுபடியும் கொஞ்சம் பார்வையிட்டால், இத்தனை வேகம் காட்ட மனம் வராது என்பதும் மிகையல்ல.

அதுபோலவே கால வெள்ளத்தில் கட்டறுபட்டு கடலில் மூழ்கித் தவித்துக்கொண்டு, கையில் கிடைத்த வைக்கோலின் உதவியால் கொஞ்சம் பெரிய கூச்சல் கிளப்பிக்கொண்டிருக்கும் காமராசர் கட்சியும் கர்னாடகத்தில் போடப்பட்டுள்ள பூட்டுக்களின்மீது விழி பாய்ச்ச வேண்டும்.

துணைக் கண்டத்திலேயே, அங்கேதான் மிக அதிக அளவுக்குத் தொழிற்கூடங்கள் மூடப்பட்டிருப்பதாகத் தகவல் தந்திருக்கிறது மத்திய அரசு! திறக்கப்பட்டவை போக இன்னும் தீர்க்கப்பட்டு திறக்கப்படவேண்டியிருப்பவை 603 தொழிலகங்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தைப் போன்றே, அங்கெல்லாம் இப்பிரச்னைக்காக ஒருங்கிணைந்த உரத்தக் குரல் ஒலிக்குமானால், அந்தக் குரல்களின் வேகம், துணைக் கண்டத்தின் வலுவான கதவுகளையெல்லாம் உடைத்து நொறுக்கி, தென்கிழக்காசியா முழுமையும் எதிரொலிக்கக்கூடும்.

பத்திரிகைகள் தரும் செய்திகளின்படி, இப்போது அப்படி எதுவும், எங்கும் எதிரொலிப்பதாகத் தெரியவில்லை—தமிழ்நாட்டைத் தவிர!

தொன்றுதொட்டு, தமிழ்நாட்டுக்கு ஒரு சிறப்புண்டு; அது — எல்லாவற்றுக்கும் வழிகாட்டி தமிழ்நாடு என்பது!!

இந்தப் பிரச்னையிலும் அது வழிகாட்ட முந்துவது பண்டைச் சிறப்பின் அடிப்படை, அழுகிவிடக் கூடாது என்பதற்காகவோ என்னவோ!

ஆனல், சுமார் 5 கோடி மக்களுக்கு அன்றாடம் தங்கள் வாழ்க்கை ஓடத்தை, அமைதியாக ஓட்டிச் செல்லும் நல்வாய்ப்பு வேண்டும்;

அலைகளாலும், காற்றின் அலைப்புக்களாலும் அந்த ஓடம் அல்லாடிக் கொண்டிருக்கிறது என்பதை அனைவருமே எண்ணிப் பார்க்கவேண்டும்.

—திருவாரூர் மூத்துராமன்.

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மல் கலந்து கொண்டார் சூ-என் லாய் என்பதை தினமணி நாசுக்காக வெளியிட்டுள்ளது.

"விமான நிலையத்தில் நிக்சனை சீனப் பிரதமர் சுமுகமாக வரவேற்றார். ஆனால், அவர் முகத்தில் புன்முறுவல் காணப்படவில்லை.

...நிக்சனின் புன் முறுவல் பெரிதாக இருந்தது. அவர் வாய்விட்டுச் சிரிப்பார் போலத் தோன்றியது. சூவிடம் புன்சிரிப்பு இல்லை"

என்று செய்தி நிறுவனத்தின் செய்தியைத்தான் தினமணி தந்திருக்கிறது என்றாலும், நமது கற்பனையல்ல, நிக்சன் அழைத்து வந்திருக்கும் செய்தியாளர்களது சிந்தனை ஓட்டம் எப்படி இருக்கும் என்பதை நம்மால் யூகிக்க முடிகிறதல்லவா!

சூவுக்குச் சிலகாலமாகவே உடல் நலமில்லை என்ற செய்திகள் அவ்வப்போது இதழ்களில் காணப்பட்டதுண்டு.

நிக்சனுக்குக் கொடுத்த வரவேற்பின் போதும், அவருடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் போதும் அவர் அடிக்கடி கைகளை அசைத்துக் கொண்டிருந்தாரம்! ஒரு கால் அவருக்குப் பாரிச நோயாகவும் இருக்கலாம்! அந்த விவரம் அந்தச் செய்தியாளர்களுக்கு எடுத்துக் காட்டப்பட்டதோ என்னவோ!

மதியாதார் வாயில் மதித்தொரு கால் வீடு சென்று மிதியாமை கோடி பெறும் என்பது தமிழ் நாட்டுப் பாடல்.

கடந்த இருபது ஆண்டுக் காலமாக சீனாவும் அமெரிக்காவும் ஒன்றையொன்று மதித்துக் கொண்டவை அல்ல! இப்போதும் கூட நீ வலுவுள்ளவனா? நான் வலுவில் சிறந்தவனா என்ற வலிமைப் போட்டி வியட்னாமில் நடந்து கொண்டுதானிருக்கிறது.

என்றாலும், தமது அந்தரங்க ஆலோசகரான கிஸ்ஸிங்கரைத் தூது அனுப்பி, சீன விஜயத்துக்கு ஏற்பாடு செய்துகொண்டு, சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கும் அமெரிக்க அதிபர், சீனாவை மதித்துத்தான் அந்த வாயிலை மிதித்திருக்கிறார்!

சீனா மதிக்கவில்லையானாலென்ன? —நாமே முதலில் மதிப்போம்; பிறகு அதன் மதிப்பைப் பெறுவோம் என்பது நாகரிகமான ஒரு நடைமுறைதான்! அரசியலில் பண்பாடுள்ள ஒரு செயல்தான் அது.

எனவேதான் வெள்ளை மாளிகையின் இன்றைய அதிபர், சிவப்புச் சீனாவுக்குச் சென்றிருக்கிறார்!

இது குறித்து வடகொரியாவில் சில ஏடுகள்—

"நிக்சன் ஒரு கையில் வெள்ளைக் கொடியுடனும், மற்றொரு கையில் பிச்சைப் பாத்திரத்துடனும் வந்திருக்கிறார்."

என்று செய்திகள் வெளியிட்டுள்ளனவாம்! வெள்ளை மாளிகை அதிபர், வெண்கொடி ஏந்தி வருவதன் மர்மம், போரில் தோற்ற நிலையில் சமாதானக் கொடியேந்தி வருவது போல என்ற அந்த செய்தியின் அடக்கம் வருங்கால வியட்னாமைக் காட்டுகின்றதோ என்னவோ! ஆனால் மறு கையில் பிச்சைப் பாத்திரம் ஏந்தியிருக்கிறார் நிக்சன் என்பதற்கான விளக்கத்தை இப்போது நம்மால் தர முடியவில்லை!

பிரெஞ்ச் நாட்டின் முன்னாள் அமைச்சர் மால்ரூ என்பவர்கூட இந்த வருகை குறித்துக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்! ஆனால், அவரது கருத்து வடகொரிய ஏடுகளின் கருத்துக்கு முரண்பட்டதாக இருக்கக் காணலாம்!

'புரட்சி' ஆர்ப்பாட்டத்தை விட, மக்களது வாழ்க்கை நிலை குறித்து இப்போது மாவோ அதிக கவனம் செலுத்துகிறார்.

நிக்சனது பேச்சின் போது, சீன மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தத்தக்க உதவிகளைக் கோரக்கூடும்.

அந்த கோரிக்கையினை மதித்து அதிபர் நிக்சனும் சீனாவுக்கு தாராளமான அளவுக்குப் பொருளாதார உதவிகளைச் செய்ய முன்வரலாம்!"

என்கிறார் மால்ரூ:

வெள்ளை மாளிகை அதிபர் பிச்சைப் பாத்திரத்துடன் வருகிறார் என்கிறார் ஒருவர்! இல்லை, இல்லை; அவர் தாராளமாகப் பிச்சையிட வருகிறார் என்கிறார் இன்னொருவர்!

ஆனால் நிக்சனது சீன வருகை குறித்த செய்தி வந்த நாள் முதல், பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டுவரும் இன்னாள் வரையில், இதிலே மிகுந்த கூரிய, நிதானமான கருத்தோட்டம் செலுத்திவரும் இரஷ்யா—

கம்யூனிசத்தில் பிளவுண்டு பண்ணுவதுதான் நிக்சனின் நோக்கம்.

என்கிறது.

நிக்சனது சீனச் செலவு, சீன நாட்டுக்குள் முக்கியத்துவமுடையதாகக் கருதப்படாவிட்டாலும், சீனாவுக்கும், அமெரிக்காவுக்கும் வெளியே மிகுந்த முக்கியத்துவமுடையதாகக் கவனிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஒரு வார கால பயணத்தில், பேச்சு வார்த்தையில் இரு நாடுகளும் எந்தெந்த வகையில் சுமுகமான ஒத்துழைப்புக்கும், ஒப்பந்தங்களுக்கும் உடன்பட்டு வரக் கூடும் என்பது அநேகமாக அடுத்த கிழமையே தெரிந்துவிடக் கூடும்!

அப்போது உலக நாடுகளின் ஹேஷ்யங்களுக்கும் ஒரு முற்றுப் புள்ளி ஏற்பட்டுவிடும்!

ஆனால் மொத்தத்தில், தென் கிழக்கு ஆசியாவுக்குரிய செய்தி:

"நிக்சன் போனார் — வந்தார்"— என்பதாகத்தான் இருக்க முடியும் என்று யாரேனும் யூகித்து வைத்திருந்தால், அது சரியான யூகமாகத்தான் இருக்கும்! *

விற்பனையாளர்களுக்கு

காஞ்சி விற்பனையாளர்கள் தங்களின் பாக்கித் தொகை முழுவதையும் அனுப்பி வைத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

உரிமையாளர்,
"காஞ்சி", காஞ்சிபுரம்-3.



இன்றைய பகைவர் - நாளைய நண்பர்!

தம்பி!

இனியன, இனி, பல என்று எழுதியிருந்ததுகண்டு மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறாய்—நன்றி—ஆனால் எனக்கு ஒரு சிக்கல் ஏற்பட்டுவிட்டதே, என்ன செய்வது? இனியன என்று பொதுப்படையாகக் கூறிவிட்டேன், ஆனால் உனக்கு எவை இனியனவோ! இனியன என்று எண்ணிக்கொண்டு நான் எதைக் கூறினும், அண்ணா! இதனை எங்ஙனம் இனியன! என்று நான் கொள்ள முடியும் என்று கூறிவிட்டால் என்ன செய்வது? இதுதான் எனக்கு வந்துற்ற கவலை!

எனினும் அடுத்த கணம், என் கவலை, சிறிதளவு சிந்தனையின் காரணமாகக் கடுகி ஓடிவிட்டது. உன்னை நான் அறிவேன் அல்லவா! உடன் பிறந்தானின் உள்ளப்பாங்கு புரியாமலாபோகும்! உன்னை ஆட்கொண்டிருக்கும் எண்ணங்களை அறிந்திருக்கும் போது, உன் உள்ளத்தில் உருவாகி எழிலும் ஏற்றமும்பெற்று நாட்டுக்கு அளிக்கப்பட்டு வரும் எண்ணங்களை நான் மிகுந்த ஆவலுடன் கவனித்து அறிந்துகொண்டிருக்கும்போது, தம்பி! உனக்கு எவைஇனியன என்பதனையா அறிந்து கொள்ள முடியாது?

வாளின் கூர்மை அறிந்தால் வீரன் இன்புறுகிறான் — ஆனால் அவன் முழு இன்பம், கூர்வாள் கொடியோனின் மார்பிலே பாய்ந்து அவன் கீழே வீழ்ந்திடும் போதன்றோ ஏற்படும்! ஆம்! என்கிறாய், கேட்கிறது. ஆனால் தம்பி, தூய்மையான இன்பம். சுவையுடன் பயனும் கலந்ததான இன்பம்,, கூர்வாள் கொடியோனைக் குத்திக் கொன்றிடுவதிலே அல்ல, "கூர்வாள் கொண்டோன்! குறியில் திறனுள்ளோன்! அஞ்சாது போரிடும் ஆற்றல் படைத்தோன்! இவனிடம் போரிட்டு வெற்றி காண இயலாது. எனவே ஆற்றலுக்கு அடங்குதலே சாலச் சிறந்தது, இவன் போன்ற வீரர் கொடுமை நடமாட விட்டு வைக்கமாட்டார்கள், கொடுமை இனி நிலைக்காது, நீதிக்காகப் போரிட. நேர்மை நிலைத்திருக்கப் போரிடும் ஆற்றல் மிக்கோர் எழுந்துவிட்டனர், இனி நம் கொட்டம் பலிக்காது" என்பதனை உணர்ந்து கொடுமைக் குணத்தையே அவன் விட்டொழித்திட, நல்வழிப்பட உறுதி காட்டுகிறானே, அப்போதல்லவா தனியானவதோர் இனிமை உள்ளத்தில் எழும்!

> காமராசரது "முழக்கங்கள்" இப்போது பட்டிதொட்டியெல்லாம் ஒலிக்கத் தொடங்கி இருப்பதாக ஏடுகள் பலவும் எழுதிக் காட்டுகின்றன. அந்தச் செய்திக்கு முக்கியத்துவமும் கொடுத்துக் கொண்டுள்ளன.
>
> காமராசரது பேச்சுக்கள் கழகத்தையும், கழகத் தலைவர்களையும் தூற்றுவதாக மட்டுமே இருக்கின்றன.
>
> இன்று மட்டுமா இந்த நிலை ?
>
> **28 - 7 - '57**-இலும் இப்படித்தான் என்பதற்கு இக்கடிதம் போதாதோ ?

"காலையிலே, கண்ணாளா! கடை வீதியிலிருந்து தாங்கள் வாங்கி அனுப்பிய, புதுப் புடவை! எப்படி இருக்கிறது, அதனை நான் அணிந்துகொண்டிருக்கும் காட்சி" என்று கலாபம் இல்லாமலேயே மயிலென விளங்கிடும் குயில் மொழியாள் பேசிடக் கேட்டு. உள்ளத்தரசன் உவகை அடைகிறான்! இனிய காட்சி காண்கிறான்!—களிப்பு அடைகிறான்! இல்லை என்பார் இல்லை! ஆனால் தம்பி, குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்புணர்ச்சி தட்டிஎழுப்ப, உழைத்துப் போ! என்று உறுமிடும் முதலாளியின் குரல்போல ஆலைச் சங்கொலி இழுத்திட. தொழிற்சாலைக்குச் செல்லும் நேரத்தில், துயரால் தாக்கப்பட்டு, தொல்லைகளைத் தாங்கி, தவித்துக் கிடக்கும் அவன் துணைவி அழுக்கேறிய ஆடையுடன் அலங்கோலமாக இருக்கக் கண்டு மானென்றும் மயிலென்றும், மாடப் புறாவென்றும், பாடாத பைங்கிளி வாடாத முல்லை, தெவிட்டாததேன்! என்றெல்லாம், கதையும் கூறத் தான் செய்கின்றன! இளமை தரும் எழிலுடன், உழைப்பு அளித்த உருவ அமைப்புடன் தான், இவள் என்னை மணம் புரிந்து கொண்ட நாளன்று இருந்தாள். இன்றோ! இளைத்து, களைத்து, இளமைக் கட்டுகள்! குலைந்து, ஓய்ந்த உழைப்பும், அதற்குத் தேவையான அளவுக்கு வலிவூட்ட மளிக்கும் உணவு படிப்படியாகக் குறைந்ததனால் வலிவினை இழந்து நிற்கிறாள், ஆடையிலே பொத்தல்—அழுக்கேறி இருக்கிறது! நான், உழைக்கத்தான் செய்கிறேன், கடுமையாக உழைக்கிறேன், கடமை உணர்ச்சி குன்றாமல் உழைக்கிறேன், இவளை களிப்புடன் வாழ்ந்திட வைக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் துணைக்கு அழைத்த படிதான் உழைக்கிறேன், எனினும் கிடைக்கும் ஊதியம் போதுமானதாக இல்லை; உருக்குலைந்து கிடக்கிறாள்! அழுக்கேறிய ஆடை — அதிலும் பல பொத்தல்! -என்று எண்ணி கவலைக்குடையும் [illegible] ஆலை செல்கிறான். மாலை அவன் வீடு திரும்பும்போது,

ஆடையின் அழுக்கு போக்கப்பட்டு, பொத்தல்கள் சரியாக்கப்பட்டு, அதனை மெத்த பக்குவமாக உடுத்திக்கொண்டு, புன்னகை தவழும் முகத்துடன், அவன் துணைவி வரவேற்றால் அதிலே கிடைக்கும் இனிமை—அந்தக் காட்சி தரும் இனிமை-காலையில் கடைவீதியிலிருந்து வாங்கி அனுப்பிய புதுச்சேலையை உடுத்திக்கொண்டு, மாலையில் மகிழ்ச்சியுடன் நிற்கும் மனைவியைக் காணும்போது ஏற்படும் இனிமையைவிட, அதிகமா, குறைவா என்பதல்ல தம்பி, பிரச்சினை, நிச்சயமாக, இஃது தனியானதோர் இன்பம் தருவது—அதில் ஐயமில்லை.

தம்பி, இனியன என்பன, உனக்கும் எனக்கும் எவை என்பதிலே மாறுபட்ட கருத்திருக்கக் காரணமில்லை. ஆனால், வேறு பலர் உளர், அவர்தம் உள்ளத்தைத் தொடும் எண்ணங்களும், அவர்களுடன் உறவாடும் கருத்துக்களும் வேறு, அதற்கேற்பத்தான், அவர்கள் இன்னின்ன எமக்கு இனியன என்று கூறுவர்.

"அழித்துவிட்டு மறுவேலை பார்க்கிறேன்! அத்துணை ஆணவமா, நேற்றுக் கிளம்பிய இந்த நீண்ட பேச்சினனுக்கு! நாட்டு மக்களைப் படை திரட்டிவிட்டோம் என்று முழக்கிடும் இந்த முரடன், முடிதரித்த மன்னர் பலர் எமது அடி பணிந்தனர் என்பதனை அறிவானோ! இவன் கொட்டம் அடக்கிக் காட்டுகிறோம்! கொடி கட்டி ஆள்கிறானும்; இவன் எமக்கு, பிடித்தால், பொடி! அறியான்!" என்றெல்லாம் ஆர்ப்பரித்த ஆங்கில அரசு, பிறகு நிலைமை அறிந்துகொண்டு, ஆணைக்கு அடங்கி, கட்டணம் செலுத்த இணங்கி, குறித்த நேரத்தைக் கணக்கில் வைத்து, காட்டிய வழியினை கவனத்திலிருத்தி தனது கலங்களை அனுப்பிற்றே சூயஸ் கால்வாயில், அந்தக் காட்சி நாசரின் கண்ணுக்கும் கருத்துக்கும் எத்தனையோ விதவிதமான காட்சிகளை எல்லாம்விட, நிச்சயமாக, இனியது அல்லவா! பரூக் மன்னன் விரண்டோடிய காட்சியும் நகிப் அடங்கி ஒடுங்கிய காட்சியும் இனிமை தருவனவாகத்தான் இருந்திருக்கும்! ஆனால் ஆணவத்தை விட்டொழித்து, ஆங்கில அரசு, சூயஸ் கால்வாயில், தன் கலத்தினை அனுப்பி வைத்ததே, அந்தக் காட்சிதான், மிக்க இனியது!

இனியன கேட்கின்
இயம்புதல் கேளீர்,
இனிது இனிது
எகிப்தின் எழுச்சி!
அதனினும் இனிது
ஆணவம் தவிர்த்து
ஆங்கில அரசு
அடி பணிந்ததுவே!

என்று நாசர் பாடவா வேண்டும், இப்போதெல்லாம் வெளிவருகிற படத்தைப் பார்த்தால், தம்பி, இந்தப் பாடல் தெரியும்!

அதேபோல, சட்டப் பேரவையிலே அமர்ந்திருக்கும் அனுமதியை உன் அறிவாற்றலின் துணைகொண்டு பெற்ற நாங்கள், அங்கு, ஒவ்வொரு பிரச்சினையின்பேரில் பேசும் வாய்ப்புப் பெறுகிறபோதெல்லாம், தென்னகம், வடக்கே அமர்ந்து அரசோச்சுபவர்களால் தாழ்த்தப்படுவது குறித்து கண்டனம் தெரிவிக்கிறோம். இந்த இழிநிலை இருக்குமட்டும், நீவிர் எத்துணைதான் நல்லெண்ணம் கொண்டோராக இருப்பினும், ஆளவந்தோரே! மக்கள் தம் குறை தீர்த்து அவர்தம் வாழ்வினுக்கு வளம் அளித்திடல் இயலாது!!—என்றெல்லாம் எடுத்துக் கூறுகிறோம்—தாயகத்தின் சார்பில், வாதிடும் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் நழுவவிடாது அவை தமைப் பயன்படுத்திக்கொள்ளும் பாங்கு, உனக்கு உவகை அளிக்கிறது, இனியன காண்கிறோம்! என்கின்றனர் சட்டப் பேரவையில் நமது தோழர்கள் கடமையாற்றுவதைக் காண்போர். ஆனால், சுப்பிரமணியனாரோ, ஆயாசப்படுகிறார், இதென்ன மெத்தப் படித்தவர்கள் என்கிறார்கள் இவர்களை; இவர்களோ எடுத்த பிரச்சினையின் மீதெல்லாம் தொடுத்திடும் கணை, வடக்கு-தெற்கு என்பதாகவே இருக்கிறதே, என்னே இது, என்று பேசுகிறார்; தமது அருவருப்பைக் காட்டிக்கொள்கிறார்.

எந்தப் பிரச்சினையின் மீது விவாதம் நடந்தாலும் அண்ணாத்துரையும் அவர் சகாக்களும் தனிநாடு கோரிக்கை குறித்துத்தான் பேசுகிறார்கள்—என்று **டைம்ஸ் ஆப் இந்தியா** எழுதுகிறது; எழுதும்போது அந்த இதழின் நோக்கம், சட்டப் பேரவையிலே நடந்துகொள்ளவேண்டிய முறைப்படி நடந்துகொள்ளாமல், நாட்டுப் பிரிவினை குறித்தே இவர்கள் பேசுகிறார்கள் என்று தன் அருவருப்பைத் தெரிவித்துக்கொள்ளுவதுதான் என்று மட்டும் எனக்குப் படவில்லை. தம்பி! வடநாட்டு இதழ்கள் பல, இதுபோல எழுதுவதிலே உட்பொருள் நிச்சயமாக இருக்கிறது!

சென்னை சட்டப் பேரவையில் அமர்ந்துகொண்டு ஒரு சிறு கூட்டத்தார், நித்தநித்தம் வடவர் ஆதிக்கத்தைக் கண்டித்துப் பேசியவண்ணம் உள்ளனர்; இதுநாள் வரையில் சதுக்கங்களிலும் திடல்களிலும் எழுப்பப்பட்டு வந்த முழக்கம் இப்போது சட்டப் பேரவையிலே கேட்கப்படுகிறது! நாட்டு மக்களின் கவனத்தை ஈர்க்கிறது!! எனவே, இது உடனடியாக ஒழிக்கப்பட வேண்டியதாகும்; அவசரமாக நடவடிக்கை எடுத்து இவர்களை ஒடுக்குங்கள்—காலம் கடந்துவிடுமுன் காரியமாற்றுங்கள்—என்று டில்லி அரசுக்குக் கலகமூட்டுகிறார்கள் என்பதுதான், இத்தனை ஏடுகளும் இது குறித்து எழுதுவதிலே உள்ள உட்பொருள் என்று நான் எண்ணுகிறேன்.

வரி அதிகம், தொழில் குறைவு; அறியாமை அதிகம் கல்விக்கூடங்களின் தரம் மட்டம்; விவசாயம் செழிக்கவில்லை, வாணிபம் ஓங்கி வளரவில்லை, என்பன போன்றவைகள் குறித்துப் பேசுவோரும், அறிவுத் தெளிவும் செயலாற்றும் திறனுமற்றோர், இடத்தைப் பிடித்துக்கொண்டு, ஆட்சியை அலங்கோலமானதாக்கி வருகிறார்கள், இவர்களை விரட்டி விட்டால், வல்லமையும் வாய்மையும் நிரம்பப் படைத்த நாங்கள் ஆட்சியை ஏற்று நடாத்த வந்திடுவோம், அப்போது கூனன் நிமிர்ந்து நடப்பான், குருடன் விழி பெறுவான் என்றெல்லாம் பேசுபவர்களும் மட்டுமே நாம் அறிந்திருக்கிறோம், இந்தப் 'புதியவர்களோ' நம்மை நிந்திக்கின்றார்கள் இல்லை, நமது அறிவாற்றலைக் குறைத்து பண்பற்ற முறையில் பேசிடவும் இல்லை; ஆனால் நம்மையும் சொக்கவைத்திடும் வசிகரம் படைத்த ஒரு தத்துவத்தை, கொள்கையை, ஆழ்ந்த நம்பிக்கையின் அடிப்படையில் உருவாகியுள்ள கொள்கையை, அழுத்தந் திருத்தமாகக் கூறி வருகிறார்கள்; அவர்கள் கூறக் கூற, நாமே அல்லவா, உண்மையின் பக்கம் அழைத்துச் செல்லப்படுவது போன்றதோர் உணர்ச்சி ஏற்பட்டு விடுகிறது, என்று எண்ணி, அமைச்சர்கள் சங்கடப்படுகிறார்கள். *

எப்போதும் இதே பேச்சா? எதற்கெடுத்தாலும் இந்தப் பேச்சா? ஒவ்வொரு பிரச்சினையின்போதும் இதே 'பாணி' தானு!— என்றெல்லாம் கேட்கிறுர்கள்.

சிலர், தம்பி, முகத்தைக் கூடச் சுளித்துக்கொள் கிறுர்கள்—ஆனல் அவர்கள், நாம் பேசுவது கேட்டுத் தான் அப்படி அருவருப்படைகிறுர்கள் என்று நான் கருதவில்லை—நம்மைப் பார்க்கும்போதே அருவருப் படைகிறுர்கள்—அகத்திலே உள்ள ஆயாசம் முகத் திலே தோன்றும் விசாரத்தால் தெரிகிறது. நான் பரிதாபப் படுகிறேன்—கோபம் கொள்ளவில்லை.

நம்மையும், நாம் கூறிடும் கொள்கையின் தன் மையையும் இவர்கள் புரிந்துகொள்ளும் நாளும் வராதா? புரிந்துகொள்ளும் பொன்னுள் புலர்ந்தால், இன்று கடுமையைப் பொழியும் கண்களிலிருந்தே கனிவு வழியாதா, என்றுதான் நான் ஆவலுடன் காத்துக் கிடக்கிறேன். அந்த நாளும் வந்திடாதோ? என்று ஆவல் என் நெஞ்சத்தில் நிறைந்து இருப்ப தால், கோபம் புகக்கூட இடமில்லை.

தூய்மையான தேசத் தொண்டாற்றியவர்கள் நாம் எடுத்துக் கூறிடும் இலட்சியத்தைப் புரிந்து கொள்ளாத காரணத்தினுல், கடுகடுப்பும் சிடுசிடுப்பும் காட்டுகிறுர்களே—அவர்கட்கு இன்று நாம் சட்டப் பேரவையில் பணியாற்றிடும் காட்சியே, கண்ராவி யாக இருக்கிறது; உணர்ச்சி வயப்படும் இத்தகைய வர்கள் மட்டும், நமது கொள்கையின் நியாயத்தை உணர்ந்துகொள்ளத்தக்க அளவுக்கு இதிலே தெளிவு பெற்றுவிடுவார்களானுல்—எண்ணும்போதே, தம்பி, தித்திக்கிறது—இதிலே ஈடுபாடு கொண்டுள்ள நாம் நடாத்தும் செயலை இனியன என்றுதானே இவர்கள் கொள்ளுவார்கள்!

பொறுமையுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் பணியாற்றிக்கொணடுவந்தால். அவர்களிலே எத் துணையோ பேர், மனம் மாறி, நமது நியாயமிக்க கொள்கைக்கு நிரம்ப வலிவு அளித்திடுவார்கள்.

நான், இந்த எண்ணத்தை எப்போதும் மறவா மல் பணியாற்றுவதனுல்தான், நான் சிலர் பகை கக்கினுலும் பதறுவதில்லை; கடுமொழி புகன்ருலும் கோபிப்பதில்லை; முகம்சுளித்தாலும் வருந்துவதில்லை. கதிரவனைக் கண்டல்லவா கமலம் மலருகிறது—நாம் நமது கொள்கையை எடுத்துரைப்பதிலே பெற்றுள்ள ஆற்றல் போதாது—கமலம் மலரவில்லை—காரணம் கதிரொளி கிளம்பவில்லை—என்றுதான் எண்ணிக் கொள்ளுகிறேன்.

தம்பி! உன் நோக்கமும் இதுவாகவே இருத்தல் வேண்டும் என்பதற்காகவே, இதனைச் சற்று விரி வாகவே எழுதினேன்.

இனியன கேட்பின்
என்னரும், தம்பி!
இனிது இனிது
இலட்சியம் இனிது
அதனினும் இனிது
அதன் பகைவர்கள்
அடுத்ததன் நண்பராய்
ஆகுதல் அன்றே!

என்று கூறிடத் தோன்றுகிறது. தமிழாசிரியர் துணை கொண்டு சீரும் தளையும் செப்பனிட்டுக் கொள்வாய் என்ற துணிவில், குறைநிறை கவிதை வடிவம் கொடுத்துவிட்டேன்.



தம்பி! தத்தமது கட்சிகளை எப்பாடுபட்டேனும் வளரச் செய்ய வேண்டும், அதன் மூலம் ஆதிக்கம் நடாத்தி இன்பம் காணவேண்டும் என்று கருதுபவர் கள், நாம் காரணம் ஆயிரம் எடுத்துக் காட்டினுலும், கனிவுடன் பேசினுலும், அவர்களுக்கு அளித்திட வேண்டிய உரிய மரியாதையைத்தந்தே உரையாற்றி னுலும், நமது கொள்கைக்கு வரவா செய்வர்? என்ற எண்ணம் எழத்தான் செய்யும்.

அமைச்சர் அவையினரை நோக்கி, சட்டப் பேரவையிலே நான், "நீவிர் அறிவும் ஆற்றலும் உள்ளவர்கள்; மக்களுக்கு நல்லன செய்தல்வேண்டும் என்பதிலே அக்கறை கொண்டும் இருக்கின்றீர்கள்—ஆனல் உமக்குப் போதுமான அதிகாரம் அளிக்கப்பட் டில்லை. வடக்கே குவிந்து விட்டிருக்கிறது" என்று பேசினேன்—பத்திரிகையைப் பிறகு புரட்டிப் பார்த் தாலோ, தமிழ்நாடு காங்கிரசின் தற்போதையத் தலைவர்—தற்காலிகத் தலைவர் என்றும் கூறுகிறுர் கள்—தி. மு. க. காரர்கள் அரசியலுக்கு இலாயக்கில்லை என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறிவிட்டார் என்ற செய் தியைக் காண்கிறேன்!

நானும் நமது கழகத்தவரும் அமைச்சர் அவை யினருக்கு அறிவும் ஆற்றலும் உளது என்பதனை சட்டப்பேரவையில் கூறி எமது பண்பினைத் தெரிவித் தோம்—காங்கிரஸ் கட்சித் தலைவரோ, "நாங்கள் அரசியலுக்கே இலாயக்கில்லை" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறுர்!

பண்பு தேவையில்லை என்று ஒதுக்கி விடுவோ ருக்கு நாம் எங்ஙனம் தந்துதவ முடியும்?

சட்டப் பேரவையிலே, நமது தோழர்கள் பேசிய

பேச்சிலே காணக் கிடைக்கும் பண்பும் கண்ணியமும், வெட்ட வெளியிலே காங்கிரஸ் தலைவர் பேசியதிலே தெளியும் கண்ணியக் குறைவும், நேர்மையாளர்களாலே ஒப்பிட்டுப் பார்க்கப்படாமலா இருந்துவிடும்?

"தாக்குகிறார்! தாக்குகிறார்!" என்று தாசர் கூட்டம் மகிழக்கூடும் — அதற்கான கூட்டமும், போதுமான அளவுக்குக் கூடுவதில்லை, ஆனால் அறிவாளர்கள், 'புத்தம் புதியவர்கள், இளையவர்கள், தீவிரமாகப் பேச வல்லோர், சட்டப் பேரவையிலே எத்துணைப் பண்புடன் பேசுகின்றனர், தமிழ் நாட்டுக் காங்கிரசின் தலைவர் ஏனோ, இத்தகு சுடுசொல் கக்கினார், கண்ணியத்தை விட்டு விலகினார், பண்பினை மறந்தார், என்று எண்ணிப் பார்த்திடத்தான் செய்கின்றனர்.

நாம் 'தாங்கிக் கொள்கிறோம்' அவர்களோ, தாக்குதலை நடத்தி நடத்திப் பயன் காணாததாலே தவிக்கிறார்கள்.

அரசியலுக்கு இலாயக்கில்லை என்று இவர் கூறட்டும் — பரவாயில்லை — இலாயக்குள்ளவர்கள் என்று 17 இலட்சம் வாக்காளர் பெருமக்கள் அறிவித்துள்ளனர் அது மட்டுமல்ல—வேறொன்றினையும் அறிவித்துள்ளனர் — இந்த விற்பன்னர்—எவரெவர் சட்டசபைக்கு உரியவர் என்று தீர்ப்பளிக்கும் திறம் படைத்தவர், சட்டசபைக்குத் தேவையில்லை என்றும் தீர்ப்பளித்துள்ளனர்.

இதனையும் நாடு அறியும்—நல்லோர் அறிந்தே உளர்.

நாத்தழும்பேற நம்மை நாத்திகர் என்றனர்—நன்மதி படைத்தோர், அந்தப் பழிச்சொல்லை, ஏற்க மறுத்தனர்.

நாசவேலைக்காரர்கள் என்று கூசாமல் கூறினர் —மக்கள் மன்றத்து மாமணிகளோ, வடிகட்டின பொய்யை வல்லமையினால் மெய்யாக்க முயற்சிக்கும் இவர்தம் போக்கை எள்ளி நகையாடினர்.

அரசியலுக்கு மட்டுமல்ல, தம்பி சமூகத்திலேயே, நாட்டிலேயே, இவர்கட்கு இடம் இல்லை—இருந்திட இலாயக்கு இல்லை என்று இவர் போன்றார் பேசினர்—நாடு, இத்துணை ஆணவப் போக்கு எத்துணை நாட்களுக்கு என்று கேட்டு, எள்ளி நகையாடிற்று.

வெட்கமேனும் இவர்தம் உள்ளத்தில் உறுத்தினால், நாமோ என்னென்ன பழிகளைச் சுமத்தலாமோ அவ்வளவும் சுமத்திப் பார்த்தோம்—கடுமொழியினைக் கொட்டினோம் — சட்டம் கொண்டு தாக்கினோம்—சபித்தோம்—சந்து முனைச் சிந்து பாடி நிந்தித்தோம் — எல்லாம் குறைவறச் செய்தும், காண்பது என்ன? கழகம் கருகி வருகிறதா? மக்கள் விலகிச் செல்கின்றனரா? ஆதரவு அழிந்து பட்டதா? இல்லையே! நாள் தவறாமல், நாலாறு இடங்களிலே அந்தக் 'குரல்' அல்லவா கேட்கிறது! விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் விதண்டாவாதம் பேசிக் கொண்டு தமிழகத்தில் நடமாடித் திரிகிறார்கள் என்று நையாண்டி பேசியது போய், இன்று 'எங்கும் இரண்டொருவர் இருந்து கொண்டு, 'அடுக்குமொழி பேசி மயக்கி' வருகிறார்கள், இவர்களை இனியும் விட்டு வைத்தலாகாது. என்று பேசிடும் நிலையன்றோ வந்து சேர்ந்தது? பலகாலும் பழி கூறிப் பலன் ஏதும் காணோமே, இனியும் அதே முறையில் இருந்திடின், காணப்போகும் பலன் என்ன இருக்கிறது? என்றாவது எண்ணுவர். எண்ணினரா? இல்லை! ஆசை வெட்கமறியாது என்றுதான் ஆன்றோர்களே கூறிவிட்டனரே! மீண்டும் மீண்டும். அரைத்த மாவையே அரைக்கிறார்கள்—அவர்கட்கு அலுப்புதான் அதிகமாகிறதே ஒழிய, கழகத்துக்கு மக்கள் அளிக்கும் ஆதரவு குன்றவில்லை, குறையவில்லை, குன்றின் மேலிட்ட விளக்கென ஒளிவிட்ட வண்ணம் இருக்கிறது.

சென்னை பெரம்பூரில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிவிட்டு, காஞ்சி வந்து இதனை எழுதுகிறேன், தம்பி, நாளை மீண்டும் சென்னையிலே கூட்டம்!

நான் மட்டுமல்ல—நமது கழகப் பேச்சாளர்கள் யாவருக்குமே, இதே முறையில், வேலை மிகுதி இருந்திடக் காண்கிறேன்.

இந்த இடையறாத பொதுமக்கள் தொடர்பு வீண்போகும் என்றா, ஒரு இயக்கத்தில் ஈடுபட்டவர் எண்ணுவது? இந்தத் தொடர்பு, எதன் விளைவு? என்பதனையாவது எண்ணிப் பார்த்தாரோ! இல்லை என்றல்லவா அவர் பேச்சு காட்டுகிறது! இதற்கு, வளரும் சக்தியைக் கூர்ந்து கவனித்து மதிப்பிடுவது தேவை—வேண்டாமய்யா, அத்தனை பெரியவருக்கு இத்தனை கடினமான வேலை தரவேண்டாம்; மிகச் சாதாரணமாகப் புரிந்து கொள்ளக் கூடியதையுமா இவர் மறந்து நிற்கவேண்டும். மமதை மதியை அடியோடு அழித்து விட்டதே, வருந்துகிறேன், தம்பி, நிச்சயமாக வருந்துகிறேன்.

நாம் பேசுவதோ பயனற்றவை, போக்கோ பொருளற்றது, ஆற்றலோ அடியோடு இல்லை, அறிவோ சூன்யம்—சரி—அங்ஙனமே இருக்கட்டும்—இத்தகையவர்களை நாள் தவறாமல் பல்லாயிரவர் சந்தித்திடவும், உரையாடவும், சொல் கேட்கவும் துடிப்பானேன்?

எனக்கு உண்மையில் விளங்கவில்லை—எவரெவர் அரசியலுக்கு இலாயக்கு என்பதனைக் கண்டறியும் திறமை இருப்பதாகக் காட்டிக்கொண்ட வித்தகர், இந்த விசித்திரத்துக்கு விடை அளிப்பாரா!

நான், கழகத்தின் சார்பில் வாதாடும் போக்கிலேகூட இப்போது இதனைக் கூறவில்லை, தமிழ் நாட்டு நடவடிக்கைகளை கூர்ந்து கவனிப்பவன் என்ற முறையிலேயே கூறுகிறேன்; அமைச்சர் பெருமான்களும், அந்தப் பெருமை அதிக நாள் கிடைக்காது ஆயாசப்படுவோரும் அடுத்த முறை எனக்குத்தான் எனக்குத்தான் என்று ஆவல் ததும்பும் உள்ளத்துடன் இருப்போரும், பொன்னும் பொருளும் மிக்கோரும் புலமையைத் துணை கொண்டோரும், எல்லோரும் தானே. கூடிக் கூடி நாடெங்கும் ஓடி ஆடி, கழகத்தைக் கடுவிஷமென்றும் காட்டுத் தீ என்றும், நாசவேலை என்றும், நாத்திகமென்றும், சூது என்றும் சுயநலமென்றும், மயக்கமென்றும் மதியீனமென்றும், பலப் பல கூறினர்: பலன் என்ன கண்டனர்?

பட்டி தொட்டி எங்கும் பட்டொளி வீசிப் பறந்திடும் நமது கழகக் கொடிகளைக் காணுகின்றனர்!

பட்டினமும் பாக்கமும். நமது கழக விளக்கம் கேட்கும் கோட்டங்களாவதைக் காண்கின்றனர்.

நள்ளிரவு வரையிலும்கூட தாழ்ந்த தமிழகம் மீண்டும் எழுந்திட வழிவகை யாது என்பது குறித்து நமது தோழர்கள் பேசுவதைக் கேட்டிட பல்லாயிரவர், ஆர்வம் கொந்தளிக்கும் உள்ளத்துடன் ஆவலாக இருப்பதைக் காண்கின்றனர்,

பழி பேசிப் பகை வளர்த்திட எண்ணமிடும் தலைவர்களின் பெரும்பாலோர் இல்லங்களிலேயே நமது கழக இலட்சிய முழக்கம் எழக் கேட்கின்றனர்.

'எங்கும் நிறைநாத'மாகிவிட்ட இந்த எழுச்சியை, இன்னமும் ஏளனத்தினாலும் பழி பேசுவதாலும், தூற்றுவதாலும் துடுக்குத்தனமாகத் தாக்குவதாலும் அழித்தொழித்திட முடியும் என்று, இவர்கள் கருதுவார்களானால், தம்பி, நாம் பரிதாபப்படுவது தவிர, வேறென்ன செய்ய முடியும், நீயே கூறு, கேட்போம்.

இவர்களின் காரணமும் பொருளும் அற்ற கடும் தாக்குதல், இவர் தம் குணம் யாது என்பதனை நாடறியச் செய்கிறது; இவர்தம் சுடுமொழிகளைத் தாங்கிக்கொண்டு நாம் நமது கடமையில் கண்ணுங் கருத்துமாக இருந்து பணியாற்றியபடி இருந்திடும் பண்பும், நாட்டுக்குத் தெரிகிறது.

தெரிந்ததும், தொலைவில் நின்றோரெல்லாம், தோழராகின்றனர்; கழகம் வளருகிறது!

அழகு தமிழும் அடுக்கு மொழியும், நமது கழக வளர்ச்சிக்குக் காரணம் என்கிறார்கள்!

தமிழ்மொழி வண்ணமும் வளமும் மிக்கது, ஐயமில்லை; அதன் துணை பெற்றோர் தொடங்கும் செயலுக்கு சீர் கிடைக்கிறது, மறுக்கவில்லை; ஆனால், நமது கழகம் இத்துணை வேகமாகவும் சிறப்புடனும் வளருவதற்கு உள்ள மிக முக்கியமான காரணம், அச்சமும், அதன் விளைவான அருவருப்பும், பொச்சரிப்பும் அதன் காரணமாகக் கிடைக்கும் நச்சு நினைப்பும் கொண்டோர், நம்மீது வீசிடும் சுடுசொற்களே என்பதை நான் உணருகிறேன்; தம்பி நீயும் அறிவாய்! கழகம் வளர வளர, கடுமொழி வளரும்; ஆனால் இறுதியில், கடுமொழி பேசுவோர்தான் தமது நோக்கையும் போக்கினையும் மாற்றிக் கொள்ளப் போகிறார்கள்; கழகத்துக்கு இம்மியும் கேடுபாடு வந்து சேராது.

இனியது கேட்கின்
கனிமொழித் தம்பி!
இனிது இனிது
அன்பர்கள் அருங்குழாம்
அதனினும் இனிது
ஆர்ந்தெழும் மாற்றார்
திருந்தி நம்முடன்
சேர்ந்திட விழைதல்!

எனவே, என்றேனும், வென்று வருகிறோம் என்பதை அறிவதனாலே வெகுண்டெழுந்து நமது கழகத்தின்மீது ஒருசிலர் வெறுப்பினைக் கக்கிடக் கேட்டால், தம்பி குறித்துவைத்துக்கொள், நம்மீது அவர்கள் வீசிடும் ஒவ்வொரு சுடுசொல்லும் பத்து புதிய ஆதரவாளர்களை நம்மிடம் அழைத்து வருகின்றது, என்ற பேருண்மையை.

இன்றையப் பகைவர், நாளைய நண்பர், என்றார் ஒருவர்.

என் தேர்தலின்போது, "எனக்குத்தான் ஓட்டுப் போட்டாகவேண்டும்" என்று நான் வலியுறுத்திக் கேட்கும் அளவுக்கு உறவும், உரிமையும் உள்ள ஒரு இல்லத்திலே, ஒரு இள மாது, அண்ணாவுக்கு இல்லாமலா எமது ஓட்டு? என்று கூறி, என்னைக் களிப்புக் கடலில் ஆழ்த்திய பிறகு 'காங்கிரசுக்கு ஓட்' அளித்ததாக அறிந்து. ஒரு பொதுக் கூட்டத்தில், இப்போது இங்கு எழுதியது போலவே இடமும் பெயரும் குறிப்பிடாமல் பேசினேன்; அது புரிந்ததால், எனக்கு ஓட்டளிக்காததன் காரணத்தை விளக்கியும், தான் கொண்ட போக்கு குறித்து வருத்தம் தெரிவித்தும் அந்த வனிதை எழுதிய கடிதத்தின் கடைசி எழுத்து, எனக்கு நினைவிற்கு வருகிறது.

இப்படிக்கு,

எதிர்கால

தி. மு. க. உறுப்பினர்.

என்பதுதான், அந்த வாசகம்!

இன்றையப் பகைவர் நாளைய நண்பர்-ஆகிறார்களோ இல்லையோ, நாட்டு விடுதலை எனும் மிகப் பெரிய செயலுக்கு நாம் நம்மை ஒப்படைத்துவிட்டோம்— நாம் இந்தச் சீரிய நோக்கத்துடன்தான் பணியாற்ற வேண்டும்.

உன் ஆற்றல், இதிலே எத்துணை வெற்றிபெற்றுத் தருகிறாய் என்பதைப் பொறுத்துத்தான் மதிப்பிடப்படும்.

பாட்டுக்கு பாட்டெடுப்பேன்
உன் பாட்டனாரைத்
தோற்கடிப்பேன்!

என்ற 'இலாவணி' முறையிலே அரசியல் நடத்துவது, எளிது; துவக்கத்திலே சுவைகூடத் தரும். ஆனால் அந்தச் சுவை, தம்பி, நானும் துள்ளி விளையாடும் பருவத்திலே மெத்தக் கண்டதுதான். புளியம் பழத்தைச் சுவைக்கும்போது, புளிப்புடன் ஓர் இனிப்பும் கிடைக்கும்! ஆனால் இரண்டொரு பழம் உண்ட பிறகோ, எதைச் சாப்பிட்டாலும், நாக்கிலே எரிச்சல் ஏற்படும்!

தம்பி! இலாவணி முறை அரசியலும், இது போலத்தான்; எளிது, துவக்கத்தில் சுவையும் தருவது, பிறகோ, உள்ளத்தில் அமைதியைக் குலைக்கும், இலட்சியத்தைச் சிதைக்கும். நமக்கு வேண்டாம், அந்த முறை! அது அவர்களின் 'ஏகபோக உரிமை' யாகவே இருக்கட்டும்; அனுமதிப்போம்.

அண்ணன்,

அண்ணாதுரை

அண்ணாவின் மறுபெயர் இசை

— தி. சாமிநாதன் —

யாப்பிலக்கன விதிப்படி எதுகை மோனையுடன் சொற்களைச் சேர்ப்பவர்களெல்லாம் கவிஞர்கள் ஆகிவிடமாட்டார்கள். ஆன்மீக மாண்பு நிறைந்தவனும், பன்பின் சிகரமாகவும், தெள்ளிய அறிவு படைத்தவனும் உள்ளவனாலேயே நல்ல கவிதை படைக்க முடியும். கவிதை என்பது மனிதனுடைய சிந்தனைகளையும் உணர்வுகளையும் ஒருமுகமாக்கி அவற்றிலே தூய இன்பத்தைப் பொழிவது. மனோ நிலையில் அவனைப் புதிய எல்லைக்கும் புதிய உச்ச நிலைக்கும் பெயரச் செய்வது. சிந்தனை வெளியிலே அவனைப் புதிய கோணங்களுக்கு நகரச் செய்வது. சாதாரண உலக வாழ்விற்கு அப்பால் இலங்கும் அரிய உண்மைகளை அவனுக்கு எடுத்து விளக்கி அவற்றின்பால் அவனைக் கவருவது. அவனுள்ளே இருக்கும் மற உணர்ச்சிகளை அழித்து அற உணர்ச்சிகளை எழுப்புவது. அவனின் தீய இயல்பைச் சிறிது சிறிதாகச் சாகடித்து தூய இயல்பை அவனுள் தோற்றுவிப்பது. அவனுக்கும் அவனோடு வாழக்கூடிய பிற மனிதருக்கும் உள்ள ஆன்மீக ஒற்றுமையை அவனுக்குச் சுட்டிக் காட்டி அவர்களோடு அவனை உள்ளத்தால் இணைப்பது. அவனைத் தன்னலமற்ற முயற்சிகளிலே பற்று கொள்ளச் செய்வது. மனத் துயரத்திலிருந்து அவனை விடுவிப்பது. இன்னல்களிலும் கூட இன்பத்தைக் காணும் தத்துவ கோணத்தை அவனிடம் வளர்ப்பது. இவைபோன்ற இன்னும் எவ்வளவோ ஆக்கங்களைச் செய்ய வல்லதே கவிதை.

இத்தகைய இலக்கணங்களைப் படைத்த கவிதையைச்செய்பவன், தானும் இத்தகைய இயல்புகளைப் படைத்திருந்தாலன்றி அதைச் சரிவர செய்ய முடியாது. ஒருவருடைய சொற்கள் என்பது அவனுடைய மனத்தின் மறு பிறவி. அவனுடைய அறிவின் மறு உருவம். ஒருவனுடைய எழுத்திலும் பேச்சிலும் அவனுடைய மனோஅமைப்பே பிரதிபலிக்கிறது. எனவே உயர்ந்த கவிதையை, உயர்ந்த கவிதை உருவில் வடிவு எடுக்கும் போது அவனுடைய பண்புகள், சக்திகள் அனைத்தையுமே அதில் நிரப்புகின்றான். உள்ளத்தால் நிகரற்றவன் படைக்கக்கூடிய கவிதையும் நிகரற்றதாகவே விளங்கி மக்களுக்குத் தூய அறங்களைக் காட்டி அவற்றின் வழியே அவர்களின் உள்ளங்களை இயங்கச் செய்கின்றன.

ஆற்றல் பெற்ற எழுத்தாளர்கள் உத்தம தத்துவங்களை வசனத்தில் சொல்லும்போதுகூட அவ்வசனம் ஓர் ஓசை இன்பத்தை நல்கிக் கவிதைபோல் இனிக்கின்றது. பெர்னாட்ஷாவினுடைய நாடகங்களின் முன்னுரைகளைப் படிப்பவர்கள் கவிதையின் விறுவிறுப்பையும், எழுச்சியையும், போதையையும் அவற்றிலே காண்பார்கள். உள்ளத்தால் உயர்ந்தவர்கள் பேசுவதும் எழுதுவதும் எப்படியோ அவர்களையு மறியாமல் கவிதைப் பாணியிலே அமைந்துவிடுகின்றன. சொற்கள் ஒலியாலானவை. எனவே சொற்களைச் சேர்க்கும்போது அவற்றினின்றும் ஒலி இசைவு ஏற்பட்டுச் சிறிது ஓசை இன்பம் உண்டாகும்படி அமைக்கவே எவரும் விரும்புவார்கள். கவிதை புனைபவருக்கும் வசனம் எழுதுபவருக்கும் இது பொதுவான இயல்பு. சில வசன எழுத்தாளர்கள் இதிலே சிறந்த வெற்றியைக் கண்டு விடுகிறார்கள்.

அதன் காரணமாகத்தான் அவர்களின் வசனம் கவிதையின் இசைபோன்றே சமயங்களில் இசைக்கின்றது. கைதேர்ந்த எழுத்தாளர்கள் பலருக்கு அவர்களுடைய முயற்சி சிறிதும் இன்றி வெகு லாவகமாக அவர்களின் நடை கவிதைப் பாணியிலேயே அவர்களையும் அறியாமல் அமைந்துவிடுகிறது. உணர்ச்சிகளை எழுப்பி உயர்ந்த மனோபாவங்களை உண்டுபண்ணுவதற்கு கவிதையைப் போன்ற சாதனம் கிடைத்தல் அரிது. உலகப் புகழ் பெற்ற சரித்திர நூலாசிரியர்கள் பலர் உயர்ந்த கவிதைகளைப் பன்முறை படித்த பின்னரே தங்களின் சரித்திர நூல்களை எழுத ஆரம்பித்திருப்பார்களென்று சந்தேகப்படுவதற்கு இடமளிக்கிறது.

எச். ஜி. வெல்ஸ், தூசிடைஸ், ஹிரோடோடஸ், கார்லைல் போன்றவர்கள் தங்களுடைய சரித்திர நூல்களிலே கவிதை உணர்ச்சிகளைப் பல இடங்களில் கொட்டிச் சென்றிருக்கின்றனர். சரித்திரத்தின் உருக்கமான பல நிகழ்ச்சிகளை வர்ணிக்கும்போது அவர்களே மகா கவிகளாக மாறி நாடக மேடைகள் பலவற்றை நம் சிந்தனைக் கண் முன்னே எழுப்புகின்றனர். சிறந்த கற்பனை வேகத்துடன் அவர்கள் காட்சிகள் சிலவற்றை வர்ணித்துச் செல்லும்போது நாம் படிப்பது கவிதையா? வசனமா? என்ற சந்தேகம் நமக்கே எழுந்து விடுகிறது. அவர்கள் சொல்லும் உண்மையை நம் மனதில் நன்கு பதிய வைத்து அதன் மூலம் ஒரு தத்துவத்தைப் போதிப்பதற்காக நமது உணர்ச்சிகளை உச்ச கட்டத்திற்குக் கொண்டு செல்கின்றனர்.

யாப்பிலக்கண விதிகளைக் கொண்டு பாடல்கள் இயற்றுபவன் மட்டுமே கவிஞன் என்ற கூற்று குறைக் கூற்று என்பதை நாம் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். கவிஞன் என்ற பதத்திற்குச்சிறந்த தத்துவ விளக்கத்தை நாம் ஆராய்ந்து தெளிதல் வேண்டும். அமர அறங்களையும், மேலான சக்திகளையும், மேலான மெய்ப்பாடுகளையும் தனது அறிவாலும் உள்ளுணர்வாலும் அறிந்து, அவற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்லத் தெரிந்தவனே கவிஞன். தனது அறிவிலும், மன உணர்விலும் இசையொன்று தோன்றி எழக் காண்பவனே கவிஞன். உள்ளத்தில் தோன்றியெழும் இசையைச் சொற்களால் உலகிற்கு இசைந்து உலகினைக் கவர்ந்து தன் வசப்படுத்துபவனே கவிஞன். தன்னலமற்ற தியாகத் தன்மை வாய்ந்தவனே கவிஞன். தன்னுள்ளத்தில் தோன்றிஎழுந்த கடல்போல்இயங்கும் இன்பத்தை, அதேபோன்று உலக மக்களின் உள்ளத்திலே காண வேட்கை கொண்டவனே கவிஞன். புறக் கண்களுக்கு மட்டுமல்ல, அறிவிற்கும், மனதிற்கும் அழகை உண்டாக்கிக் கொடுப்பவனே கவிஞன். அதே போன்று உலக மக்களின் அறிவிலும் மனதிலும் இசையை எழுப்புபவனே கவிஞன்.

இசை என்ற சொல்லை தத்து

வார்த்தமாக ஆராய்வோமானால் அதற்கு ஆழ்ந்த புதிய பொருள் ஒன்று நம்முள்ளே தெளிந்து நிற்கும். ஒன்றோடொன்று இசைந்து செல்வதெல்லாம் இசை. கருத்துக்கள் ஒன்றோடொன்று இசைந்து செல்லும்போது அங்கே இசை தோன்றுகிறது. சமுதாயத்தின் சக்திகள் பல ஒன்றோடொன்று இசைந்து செல்லும்போது அங்கே இசை தோன்றுகிறது. முயற்சிகள் ஒன்றோடொன்று இசைந்து செல்லும்போது அங்கே இசை தோன்றுகிறது. இத்தகைய இசையில்தான் இன்பம் பிறக்கின்றது. எனவே, 'எங்கெல்லாம் இன்பம் தோன்றி நிலவுகின்றதோ அங்கெல்லாம் ஏதோ ஒருகை இசை தோன்றி இயங்குகின்றதோ என்ற உண்மையை நாம் மறந்துவிடக்கூடாது.

இசை என்பது வெறும் சொற்களின் சேர்க்கையாகிய ஓசையின்பம் மட்டுமல்ல. இப்பொருளின் அடிப்படையில் பார்க்கும்போது, உயரிய தத்துவ நூல்கள், அழகிய கட்டிடங்கள், மக்களின் கூட்டு முயற்சிகள், அணி அணியான காட்சிகள் அனைத்துமே இசையின்பாற் பட்டவைதாம், மனித சரித்திரம் என்பதே புதிய புதிய சுருதியிலும், மெட்டிலும் இடையருதுதோன்றி எழுந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு தொடர் இசையே. சமுதாயத்தில் நாம் காணும் பல்வேறு அரசியல் பொருளாதாரப் புரட்சிகள் போராட்டங்கள் அனைத்தும், மனிதர்களின் மத்தியில் புதிய இசை ஒன்றை அமைக்க மனித சக்திகள் தீவிரமான வெறியுடனும், வேட்கையுடனும் இயங்கிப் பாடுபடுவதையே குறிக்கின்றன. இறுதி ஆராய்ச்சியில் அமர அறங்கள் மனித சமுதாயத்தில் ஒவ்வொரு சரித்திர கட்டத்திலும் சிறிது சிறிதாகத்தோன்றிவளர்ந்துகொண்டு வருவதையே நாம் சரித்திரம்எனக் குறிப்பிடுகின்றோம். இந்த அறங்களை முடிந்த அளவுக்குச் சமுதாயத்தில் தோற்றுவிக்கவும் அவற்றை நிலைநாட்டவும் முயற்சிசெய்பவன் மனித இனத்தின் மத்தியிலே பிரபஞ்ச இசையைத் தோற்றுவிக்கவும், அதை நிலைநாட்டவும் முயலுகின்றான்.

இந்த இசையை உள்ளத்தால் உணர்ந்து அதைத் தனது அறிவிலும் செயலிலும் சொல்லிலும் தோன்றச்செய்து, முடிவில் மக்களின் மத்தியிலும் எவர் அதைத் தோன்றச் செய்கிறாரோ அவர் ஒருவரே மக்களின் முயற்சிகளுக்கும் புரட்சிகளுக்கும் தலைமை வகிக்கவும், அவர்களை நடத்திச்செல்லவும் அருகதை உடையவர் ஆகிறார். அவரே உண்மையில் அரசியல் பொருளாதார சமுதாயத் துறைகளில் மக்களின் இன்றியமையாத தலைவன். இதன்படி பார்த்தால் உலக சரித்திரத்தின் மங்காத ஒளி விளக்குகளாகிய காந்தியடிகள், நெப்போலியன், நேரு, லெனின், லாயிட் ஜார்ஜ், சர்ச்சில், ஜார்ஜ் வாஷிங்டன், ஆபிரகாம் லிங்கன், தமிழகத்தின் தவப்புதல்வர் அறிஞர் அண்ணா போன்ற வீரர் பெருமக்களுக்கும் அரசியல் தலைவர்கள் பலரும் அரிய கவிஞர்களே.

சிறந்த தத்துவ நூலாசிரியர்களும், அறிவையும் ஆவேசத்தையும் ஊட்டும் பெரிய மேடைப் பேச்சாளர்களும், சதா மக்களை ஒன்றுகூட்டி உயரிய முயற்சிகளில் ஈடுபடுத்தும் கொள்கைவாதிகளும் தன்னலமற்ற தியாகச் செயல்களில் ஈடுபடும் பெருந்தகைகளும் கவிஞர்களின் வரிசையைச் சேர்ந்தவர்களே. தங்களின் சொற்களாலும் செயல்களாலும், தம்முடையலட்சியங்களை உலகினரின் உள்ளங்களில் ஏற்றி அவர்களைத் தம்முடன் கூட்டாளிகளாகச் சேர்த்துக்கொண்டு, அந்த லட்சியங்களை நிறைவேற்ற முயலும் ஒவ்வொருவரும் ஓர் அருமபெரும் கவிஞரே. அவருடைய சிந்தனைகளும், சொற்களும், செயல்களும் இசையின் பாற்பட்டவை. இசைகளிலெல்லாம் அவையே மிகச் சிறந்த இசை. தோன்றி நிற்கும் இன்பம் இசை. தோன்றிக் கொண்டிருக்கும் இன்பம் இசை. இன்பத்தைத் தோற்றுவிப்பதற்காக நடக்கும் இயக்கங்களும், புரட்சிகளும் இசையே. நன்முயற்சிகள் அனைத்தும் இசையே. உலகில் இதுவரை தோன்றிய அறிவாலும், அறிய செயல்களாலும் உயர்ந்த அறிஞர்கள் ஒருவரிகூடக் கவி பாடாதவரெனினும். உள்ளத்தால் மகா கவிஞர்களே. உயர்ந்த சிந்தனை, உயர்ந்த முயற்சி உயர்ந்த சொல் வன்மை, உயர்ந்த செயல் இவை தோன்றி நிற்கும் இடங்களிளெல்லாம் உயர்ந்த இசை தோன்றி நிற்கிறது. இதைப் புரிந்துகொண்டவர்களே உண்மையில் இசையின் பொருளைப் புரிந்து கொண்டவர்கள். கவ்தைத் தத்துவத்தைப் புரிந்து கொண்டவர்கள். மேலும் சிற்பம், சித்திரம், நாட்டியம், நாடகம் போன்ற கலைகள் அனைத்திலும் அடிப்படைத் தத்துவமாக விளங்குவது இசைத் தத்துவமே. மனித வாழ்வினை அடிப்படை தத்துவமும் இசைத் தத்துவமே.

யாப்பிலக்கணத்தைக் கொண்டு ஆக்கிய பாடலில் ஓசை இன்பத்தோடு கலந்து உலகிற்கு வழங்குபவர்களைக் குறுகியதோர் குறிப்பிட்ட பொருளிலே மக்கள் பொதுவாக கவிஞர்கள் என்றழைக்கின்றனர். எனவே கவிஞன் என்ற பதத்திற்கு நடைமுறை உலகம் கொள்ளும் பொருள் வேறு. அறிஞர்கள் கொள்ளும் பொருள் வேறு. கவிஞனின் மனப்பாங்கு, மனப்போக்கு இயல்புகள், உணர்ச்சிகள் இவைகளைக் கொண்டுள்ள மனிதரனைவரையுமே பொதுவான பொருளில் கவிஞர் என்று அழைத்துவிட்டோம். மனிதருள் உன்னதப் பிறவிகள் அனைவரும் கவிஞனின் மனோ அமைப்பைப் படைத்த கவிஞர்களே என்று கூறினால் அது முற்றிலும் சரியான கூற்றே.

உண்மையை உரை நடையில் சொன்னாலும் பாடலில் சொன்னாலும் அழகும் இன்பமும் தாமாகவே தோன்றுகின்றன. அவருடைய சொற்களின் சக்தி அவர் உண்மையை அறிந்துணர்ந்த அளவையும் திறனையும் பொருத்தது. மெய்ய்மையை ஆழ்ந்து அறிந்து சிந்தித்தவர்கள் அதைக் கூறும்போது அவர்களின் சொற்கள் மிகச் சிறப்பாக அமைந்து நம்மைக் கவருகின்றன. உண்மையைக் கூறுவது அழகைப் படைப்பதாகும். அழகைப் படைப்பவர்கள் கலைஞர்கள். சொற்களால் அழகைப் படைப்பவன் கவிஞன் என்றழைக்கப்படும் கலைஞன். எனவே உண்மையைக் கூறி அழகைப் படைப்பவர்கள் அதைப் பாடலில் கூறினாலும் வசனத்தில் கூறினாலும் அவர்கள் கலைஞர்களின் வரிசையைச் சேர்ந்தவர்களே. வசனம் இப்பணியைச் செய்யும்போது அவ்வசனம் ஒரு கலைப் பொருளாக ஆகிவிடுகிறது. உண்மையைத் திறம்பட உணர்ந்து அறிந்த அறிவின் வல்லமைதான் இறுதியில் சொல் வன்மையாக அமைகின்றன. அறிவிலே உண்மை மேலும் மேலும் தெளிவடையும்போதுசொற்களும் தெளிவடைகின்றன. சொற்களில் தெளிவு அதிகப்பட அதிகப்பட அவற்றின் கவர்ச்சியும் அதிகரிக்கிறது. உண்மையைஅறிவு உணர்ந்து அனுபவிக்கும் ரசனை அதிகப்பட்டும்

போது அது சொற்களிலே பிரதிபலிக்கிறது. எனவே சொற்களும் மனதிற்கு இதமும் எழுச்சியையும் அளிக்கும்வண்ணம் அமைகின்றன.

அறிஞர் அண்ணா அவர்கள் திராவிடர் கழகத்தை விட்டு விலகி திராவிட முன்னேற்றக் கழகத்தைத் துவக்கி ராபின்சன் பூங்காவிலே கொட்டும் மழையையும் பாராமல் "கண்ணீர்த் துளிகளே என் கண்மணிகளே" என்று துவங்கி தன் தம்பிகளுக்கு அரிய தொர்ந சொற்பொழிவை நிகழ்த்தினார். அவர் தன் தம்பிகளுக்கு மட்டுமல்லாமல் உலக மக்களும் ஏற்றுக்கொள்ளும் எளிய தத்துவமான "கடமை, கண்ணியம் கட்டுப்பாடு" என்று பாமரரும் புரிந்து கொள்ளும்படி தன் வெண்கலக் குரலாலே முழக்கமிட்ட போது காழ்ப்பு மனம் கொண்டவரைத் தவிர, அரசியல் சூதாடிகளைத் தவிர நல்ல உள்ளம் படைத்தவர்கள் யாவரும் அதை மனதுக்குள் ஏற்று மகிழ்ந்தார்கள்.

பொது வாழ்வில் ஒருவரோ அல்லது ஒரு கட்சியோ இறங்கி மக்களுக்குத் தொண்டு செய்யும் போது அரசியல் எதிரிகள் மட்டுமல்லாமல் ஆஷாடபூதி வேடம் போடும் போலிகள் கூச்சலிடத் தான் செய்வார்கள். அதையெல்லாம் பொறுமையுடன் ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவத்தைப் பெறவேண்டும் என்பதை உணர்த்த "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்று எளிமையான சொற்களினால் ஆழமான கருத்தைத் தந்தார்.

அவர் வளர்ச்சி கண்டு பொறாமையால் தன்னல நோக்கத்தால் அரசியல் எதிரிகள் வசை பாடிய போது அவர்களை அதே பாணியில் வசைபாடாமல் "வாழ்கவசவாளர்" என்று வாழ்த்தும் சிறந்த அரசியல் பண்பாட்டை உருவாக்கினார், நாட்டில் ஒரே கட்சிதான் ஆள வேண்டும், மாற்றுக் கருத்துக் கொண்டவர்களை நசுக்கி விட்டு மறுவேலை பார்க்கிறேன் என்று கூச்சலிட்டு ஜனநாயகத்தின் அரிய தத்துவத்தைப் புரிந்து கொண்டவர்கள்போல் போலி வேடம் போட்டுத் தன் அறியாத்தனத்தைக் காட்டிக்கொண்ட பெரிய மனிதர்களை உலகுக்குக் காட்டி மாற்றுக் கருத்துக்குள் உள்ள உண்மையைப் புரிய வைக்க "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்று அழகிய எளிய சொல்லிலே நாட்டு மக்களுக்குப் படம் பிடித்துக் காட்டினார். இருபது வருட காலமாக காங்கிரஸ் நண்பர்கள் இந்தியாவை ஆண்டபோது பணக்காரன் மேலும் பணமுள்ளவனாக வளர்ந்தானே தவிர ஏழை எளிய பாட்டாளி மக்கள் வாழ்க்கைத் தரம் உயரும் பொருளாதாரம் கொள்கையைக் கடைபிடிக்கத் தவறிவிட்டார்கள் என்று காங்கிரசின் பொருளாதாரக் கொள்கையை மக்களுக்குப் புரிய வைக்க "காகிதப்பூ மணக்காது காங்கிரஸ் சோஷலிஸம் இனிக்காது" என்று பண்பாளானவிமர்சனம் செய்தார்.

தமிழகத்துக் காங்கிரஸ் பெருந்தலைவர்களிடையே பூசல் ஏற்பட்டு நீ பெரியவனா? நான் பெரியவனா? என்ற போட்டி மனப்பான்மை தோன்றி தன் வளர்ச்சியிலே குறியாக இருந்து நாட்டைப் பற்றிக் கவலைப்படாமல் பதவி ஆசை பிடித்து பெரிய மனிதர்களோடு சேர்ந்து ஒருவரை ஒருவர் அழிக்க நினைத்தபோது அதைக் கோடு உயர்ந்தது குன்றம் தாழ்ந்தது" என்ற தலைப்பிலே அழகாகப் படம் பிடித்துக் காட்டி நாட்டு மக்களை உணரச் செய்தார். ஆத்திகம் நாத்திகம் பற்றி சர்ச்சை எழுந்த போது எது உண்மையான ஆத்திகம் என்பதை அழகாக விளக்கியதோடு மட்டுமல்லாமல், இறைவனைத் தேடிக் கொண்டு பெரிய பெரிய கோயில்களுக்குப் போக வேண்டுமென்பது அல்ல. அன்றாடம் உணவே இல்லாமல் வாடியும், தனக்கென்று உட்கார ஒரு குடிசை கூட இல்லாமல் வானமே கூரையாய் எண்ணி தெரு ஓரங்களிலும், நகரத்தின் நடைபாதை ஓரங்களிலும் போவோர் வருவோர்போடும் சில்லரைக் காசுகளை எதிர்பார்த்து தன் வாழ் நாளை ஓட்டிக்கொண்டிருக்கிறானே ஏழைப் பட்டினியாளன், அவன் வாழ்வில் ஒளிஏற்றி அவன் வாழ்வில் சிறிது நிம்மதியடையப் பாடுபட்டு அவன் மகிழ்ந்து மனமாரச் சிரிக்கிறானே அங்கே, "அந்த ஏழையின் சிரிப்பிலே இறைவன் இருக்கின்றான்" என்று இறைவன் இருக்கும் உன்னதமான இடத்தை மக்களுக்கு காட்டினார்.

வன்முறையைத் தூண்டி நாட்டில் அமைதி ஏற்படாமல் தடுத்து அதில்தான் அரசியல் லாபம் பெற்றுத் தன் வாழ்வை வளப்படுத்திக் கொண்டு பாட்டாளிகளையும்ஏழை விவசாயப் பெருங்குடி மக்களையும் போராடத் தூண்டி தங்களுக்குள்ளேயே போரிட்டுக் கொண்டு அழிவை நாடி வேகமாகச் செல்லும்படி அவர்களைத் தூண்டி விட்டு விட்டு ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்த அரசியல் ஓநாய்த்தனத்தை அம்பலப்படுத்தியும், மக்களைத் தானே உணரும்படிச் செய்யவும் "கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு" என்று கூறி மக்களுக்கு எளிய சொல் நடையில் எழுதிக் காட்டி அவர்கள் அமைதியடைய நல் வழி காட்டினார். நாட்டின் பொருளாதாரத்தை காகித நோட்டடித்து சீரழித்த போது நடுவணரசை "நாட்டுவாட்டம் போக்கிட நோட்டடித்தால் போதாது" என்றார். மக்களை உழைக்க வைக்கும் பணி படுத்தும் திட்டத்தைக் கொடுத்து அதன் காரணமாக உற்பத்தி பெருகினால் நாட்டின் வாட்டம் போகும் என்று எளிய சொல்லாட்சியால் விவரித்துக் காட்டி உண்மையை உணரும்படிச் செய்தார். இப்படி அடிக்கடி தன் வாதத் திறமையாலும் அறிவுத் திறனாலும் நாட்டு மக்களிடையே தன் கட்சியின் செல்வாக்கினை வளர்த்து எளியவர்களும் அரசியலிலே புகுந்து அரசியலை அறிந்து நாட்டை ஆளும் திறமையை அடைய முடியும் என்றும், தனக்குப் பின்னால் லட்சக்கணக்கான தம்பிகளை உருவாக்கி "தம்பியுடையான் படைக்கு அஞ்சான்" என்று பாச உணர்வையும் கூட்டுறவுத் தன்மையை விளக்கியும், ஏழை எளிய மக்கள் தன் வாழ்விற்காகப் போராடித் தங்கள் வாழ்வு வளம் காண முடியாமல் தடுத்து பெரு முதலாளிகள் ஆட்சியந்திர உதவிகொண்டு அவர்களை நசுக்கி அவர்களின் முயற்சியைத் தோற்கடிக்க முயன்றால் அதில் நாம் தோற்றுவிடக் கூடாது என்று மக்களின் சக்தியை, முயற்சியை விளக்க "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" என்ற இசைச் சொல்லை எளிய தமிழிலே உருவாக்கி மக்கள் மத்தியில் புதிய சமுதாய உணர்வை உண்டாக்கி அரசியல்விழிப்புணர்ச்சியை உண்டாக்கி ஏழை எளியவர்களாலும் தமிழ் மண்ணை நன்முறையில் மாற்றாரும் போற்றும் வண்ணம் ஆளமுடியும் என்பதை நடைமுறையில் திறமையோடு செய்து காட்டினார். இவ்வகையிலே அறிஞர் அண்ணா அவர்கள் தன் நா வன்மையால், இசை மொழியால் மக்களை மகிழும்படிச் செய்தார்.

கவிதா சக்தி என்பது பயிற்சியாலோ அல்லது இடையறாத முயற்சியாலோ மட்டும் வந்துவிடுவதல்ல. உயர்ந்த பண்பாடும், அற இயல்பும் கொண்டவர்களின் மனோ அமைப்பில் இது ஓரளவு தானாகவே உதித்து எழுகிறது. உண்மையைத் திறம்பட அறிந்து ஆராய்ந்து அதைத் தம் அறிவோடு அறிவாக ஆக்கிக் கொண்டவர்களின் சொற்களில் அது தானாகவே நிலவுகிறது அத்தகையோர் சாதாரணமாகப் பிறருடன் உரையாடும்போதுகூட, அவர்களின் சொற்களில் இனம் தெரியாத ஒரு புனித சக்தி தோன்றி நிறைவதையும் பிறரைக் கவருவதையும் காணலாம். அறிஞர் அண்ணாவின் உரையாடல்கள் இதற்குச் சிறந்த உதாரணமாகும். அவர்களின் பேச்சுக்களிலும் உரையாடல்களிலும் ஆடம்பரமான சொற்களையும் டாம்பீகமான வாக்கியங்களையும் காண முடியாது. எனினும் அவரின் சொற்களிலே எத்தனையோ அறிஞர்களும் மேதைகளும் மட்டுமல்லாமல் சாதாரண பாமரனும்கூட மயங்கியிருக்கின்றனர். பெரிய பெரிய அரசியல் தலைவர்கள்கூட கண்டு அதிசயித்து இருக்கிறார்கள். எத்தனையோ துரோகிகளும், சந்தர்ப்பவாதிகளும் அவரின் சொற்களால் விழிப்படைந்து தங்களின் நிலையை உணர்ந்திருக்கிறார்கள். அவரின் சொற்களைக் கேட்பதற்கு எப்பொழுதும் அலை அலையென மக்கள் கூட்டம் அவரைத் தொடர்ந்து சென்றுகொண்டே இருந்தது. அவர் சொற்களைப் புனைந்து அழகுபடுத்துவதில்லை. ஆர அமர உட்கார்ந்து சொற்களைப் புனைந்து அழகுபடுத்துவதில்லை.

இதையெல்லாம் அவர் அறிவு முதிர்ச்சியடையாத குழந்தைகளின் விளையாட்டு என்று எண்ணினார். அவ்வப்போது தம் மனதிற்கு வந்த சொற்களைக் கொண்டே தம் கருத்துக்களை விளக்கிச் சென்றார். அவர் விளக்கிச் சென்ற முறையின் காரணமாக மிக மிகச் சாதாரண சொற்கள்கூட ஒரு புதிய கம்பீரத்தையும், கவர்ச்சியையும் அடைந்து அரிய சக்தியுடன் இயங்கின. எதையும் விளங்கவைப்பதில் அண்ணாவுக்கு நிகர் அண்ணாதான். அவரிடம் அறிவு விளக்கம் இருந்ததால் சொல்லிலும் விளக்கம் தானாக ஏற்பட்டது சொற்களிலே கருத்து நன்கு விளங்கி நிற்கும் போது அச்சொற்கள் அமோக எழிலுடன் விளங்குகின்றன. மிகச் சாதாரணமான சொற்களுக்கு அரியாசனம் வழங்கியவர் அறிஞர் அண்ணா. அவற்றைக் கொண்டு எவரும் எதிர்வாதம் செய்ய முடியாத அளவிற்கு தம் கருத்துக்களை அவர் விளக்கினார். அண்ணாவின் சொற்களிலே காணப்பட்ட கவிதையின் போதையை கவிஞர்களே பலர் பருகிப் புகழ்ந்திருக்கிறார்கள். அறிஞர்களுக்கு கவிதைமொழியையன்றி வேறு எம்மொழியிலும் பேச வராது.

கவிதா சக்தி என்பது கவிஞர்களுக்கு மட்டுமே உரியதல்ல. தம் கருத்துக்களை அழகு சொற்களிலே அமைத்து அவற்றில் பிறரை மயங்கச்செய்யும் ஆற்றல் இருக்குமாயின் அவரது உரையாடலும் பேச்சும் கவிதையின்பாற்பட்டதே. உலகப் புகழ் பெற்ற பல பேச்சாளர்களும், வசன எழுத்தாளர்களும் கள்ளுக்குரிய போதையைத் தம் சொல்லுக்குரியதாக்கி தம் நாட்டவரையும், பிற நாட்டவரையும் பெரிதும் கவர்ந்திருக்கின்றனர். கவிதையில் காணும் கருத்து நிறைவையும் ஓசை நிறைவையும் இவர்களின் உரையாடல்களிலே காண்கிறோம். கவிஞர்கள் கூட இவைகளைப் படித்துத் தங்களின் கவிதைகளை வளப்படுத்திக் கொள்கின்றனர். இம்முறையிலே அறிஞர் அண்ணா அவர்கள் மக்களை மயக்கும் இசையாகவும் ஆகி அவர்களின் உள்ளங்களிலே மறைந்தும் மறையாமல் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

★

இந்திராகாந்தி அம்மையாருக்கு மேலும் மேலும் அதிக பலம் சேருவதானது, அவரை ஒரு சர்வாதிகாரியாக்கிப் பார்க்கத்தான் பயன்படும். அப்படி ஆக அவர் விரும்புகிறார் என்பதை விளக்குவதுதான், மத்திய அரசுக்குக் கட்டுப்பட்ட மாநில ஆட்சிகள் வேண்டுமென்பது. பலமான கண்டனத்துக்குரிய கருத்து இது!

—மொரார்ஜி தேசாய்

ஒரு 'முண்டச்சி' இஷ்டத்துக்கு நாம நடக்கிறதா? கட்டுப்படறதா? தூக்கி எறியவாணுமான்னே! இந்திரா என்ன சர்வாதிகாரியான்னே!

*　　*　　*

தேர்தல்லே ஏதோ சூது இருக்குதுன்னு சொல்றேன். விஞ்ஞான ரீதியா ஓட்டுச் சீட்டுக்களையெல்லாம் சோதனை செய்யின்னு சொல்றேன். ரஷ்யாவிலே இருந்து பாலட் பேப்பருங்க அச்சடிச்சி வந்திருக்குதுங்கிறேன். ஏன்னா. நிச்சயமா ஜெயிப்பான்னு நெனைச்ச சிலபேருகூட தோத்துப் போயிருக்காங்கன்னே!

— காமராசர்

(1971 தேர்தலுக்குப்பின்)

பாண்டிச்சேரி மாநிலம் அரியாங்குப்பம் தொகுதியில், இந்திரா காங்கிரஸ் வேட்பாளரை, காமராசர் கட்சி ஆதரித்து வாக்களிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்திரா காங்கிரசையே அனைவரும் ஆதரிக்கவேண்டும்.

—தமிழ்நாடு ஸ்தாபன காங்கிரஸ்

இந்திரா சர்வாதிகாரி ஆகிறார் என்கிறார் மொரார்ஜி! 1969-இல் 'முண்டச்சி'க்கு அடங்கி நடக்கிறதா? எனக் கேட்டுவிட்டு, 1971-இல், இந்திரா காங்கிரஸ் நடத்தி[illegible] தேர்தலிலே நம்பிக்கையில்லாது 'ஊழல் நடந்திருக்கிறது' என்ற விளக்கம் அளித்துவிட்டு உறங்கிக்கொண்டிருந்த காமராசர், அரியாங்குப்பத்தில் மட்டும் இந்திரா காங்கிரசை ஆதரிக்கப் போகிறாராம்! எதற்கிந்த மாற்றம்? காமராசர் தமிழ்நாட்டைக் காட்டிக்கொடுத்துவிட்டு, இந்திரா காங்கிரசுக்கு ஓடப் போகிறாரோ?

பிச்சைக்காரி

"ரெண்டு கண்ணும் இல்லாத கபோதி தாயே... கால் இல்லாத மொடவனுங்க அம்மா! உங்க பிள்ளை குட்டிகளுக்குப் புண்ணியம்—ரெண்டு சோறு போடுங்க அம்மா...!"

மனப் பாடமாகிப்போன வார்த்தைகள் கணீரென்ற தெறிப்பாக வெளிப்பட்டன,

ஒடுக்கு விழுந்த அலுமினியப் பாத்திரத்தை ஏந்தி அவனுக்கு வழி காட்டியவாறே ஒரு பெண்ணும் கோரஸ் எழுப்புகிறாள். "பிச்சை போடுங்க தாயே!..."

அவளுக்கு இளவயது. கறுப்பிலும் பொலிவு. நல்ல உடலமைப்பு, மானத்தை மறைப்பதற்கு உடலைச் சுற்றிய கந்தல்கள் மாறாக, பறை சாற்றிக் கொண்டிருந்தன—அவள் இளமையை. எப்படி இவளும், குருட்டுப் பிச்சைக்காரனும் ஒன்று சேர்ந்தார்கள்?...

இரவு எட்டு மணி ஆக வேண்டியதுதான். ஊன்றுகோலின் உதவியால் தன் முடமான காலின் குறையையும், அவளின் உதவியால் குருடாகிப் போன கண்களின் இயலாமையையும் அவன் சட்டை செய்யாமல் "ரெண்டு கண்ணும் இல்லாத கபோதி தாயே..." என்கிற பாட்டைப் பாட ஆரம்பித்து வீடு வீடாக வருவான்.

எங்கள் தெருவின் வழக்கமான இரவுக் காட்சி இது. வேறொன்றும் உண்டு. அது—

அரசமரத்துக் கோடியின் இருளில் ஒரு பெண்! இரவு வேளையில் அவளுக்கு அங்கு என்ன வேலை என்கிறீர்களா? இரவில் தான் வேலை. முகம் பளபளக்கும், கழுத்தில்கூட ஏதேதோ மணிகள் மின்னும். நிலவின் ஒளிமங்கலிலும் அவளது தோற்றம் பளீரிடுவது எப்படி...? திடீரென்று யாராவது ஒரு ஆசாமி அவள் முன் தோன்றுவான். அவர்கள் ஏதோ பேசுவார்கள்... அவன் சட்டைப் பையிலிருந்து—ரூபாய் நோட்டுகளாகத்தான் இருக்கும் — கை மாறும்! அவள் சிரிப்பாள். அவனுடைய தோளில் கையைப் போட்டுக் கொண்டு நடப்பாள்...

அரச மரத்தடிப் பிச்சைக்காரனின் மனைவியையும், உடலை விற்று வயிறு வளர்க்கும் இவளையும் நான் மனத் தராசில் போட்டுப் பார்ப்பது உண்டு.

* * *

மறுநாள்—இரவு மணி எட்டு.

சன்னல் ஓரமாக வீட்டில் அமர்ந்திருந்த எனக்கு வியப்பு. எட்டு

— ஜே. வி. நாதன் —

அடித்து ஐந்து நிமிடங்கள் ஆகியும் இன்னும் குருட்டுப் பிச்சைக்காரன் குரலைக் கேட்க முடியாததே வியப்புக்குக் காரணம்.

மெல்ல எழுந்து தெருவோடு நடந்தேன், அரச மரத்தடியை நெருங்கியபோது—

"ஹூம்...உம்..." என்ற முனகல் சப்தம். என்ன...? என்ன ஆயிற்று?

"நான் சொன்னபடி கேப்பியா, மாட்டியா? உடனே சொல்லிடு" என்று பிச்சைக்காரனின் குரல் பலகீனமாகக் கேட்டது. அவள் புலம்பினாள்: 'ஐயோ, என்ன செய்வேன்? உன் ஒடம்பு அனலாக் காயுதே...நீ சும்மா இருக்க மாட்டே? அதைப் பத்தியெல்லாம் இப்ப என்ன கவலை...?"

"இப்பக் கவலைப்படாமல் எப்ப கவலைப்படறதாம்! உம்...இந்தா, நான்' சொல்றதைக் கேளு! என்னாலே ஒனக்குக் கொஞ்சமும் சுகம் கெடையாது. நான் எக்கேடு கெட்டால் என்ன? நீ யாராவது கண்ணு விளங்கறவனை கால் கை இருக்கிறவனைப் பார்த்து போய்ச் சேர்ந்து நல்லா வாழு! என்மேலே சத்தியமாச் சொல்றேன். நீ போகத்தான் வேணும். நான் செத்துட்டா முன்சுபாலிடி லாரிலே கொண்டு போயி புதைச்சுடுவாங்க நீ அதையெல்லாம் பார்த்து இன்னும் கஷ்டப்பட வேண்டாமின்னுதான் இப்பவே ஒன்னைப் போயிடச் சொல்றேன்...ஹூம்...நீ இன்னம் போவலியா?..." குருட்டுப் பிச்சைக்காரனுக்கு சுவாசம் கொர் கொர்...ரென்று இழுத்தது. திணறலோடு பேசினான் அவன்.

அவள் அழுதாள். அவனுடைய பேச்சைக் கேட்டுவிட்டு அவள் என்ன செய்யப் போகிறாள் என்றறிய எனக்கு துடிப்பு!

"தே!...என்ன பெரிய வார்த்தையெல்லாம் போடுறே?" என்றாள் அவள்.

"ஆமா...உம்மேலே ஆணை உடுறேன். நீ வேற எவனாவது கொறை இல்லாதவனைப் பார்த்துக் கட்டிக்கிட்டு சொகமா வாழத்தான் வேணும். என்னோட வாழ்ந்து என்னத்தைக் கண்டே ... உம் நீ போகலே இன்னும்?" ஜுர வேகம் ...மூச்சு வாங்கலில் வார்த்தைகள் துண்டு துண்டாகத் தெறித்து விழுகின்றன.

அவள் எழுந்தாள். அவனையே பார்த்துக்கொண்டு நிற்கிறாள். 'ஆமாம் ... இவனுடன் வாழ்ந்து என்ன சுகம் கண்டுவிட்டேன்' என்கிற பாவனையில் சிந்திக்கிறாளா அவள்? ... மெள்ள ஜுரத்துடன் கிடக்கும் அவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே நடக்கிறாள்.

"சே. பிச்சைக்கார புத்தி. பிச்சைக்கார புத்திதான்..." புருசன்

சாகக் கிடக்கிறான். இன்னொருத்தனைத் தேடிக்கொண்டு கிளம்பி விட்டாளே இவள்! ... எவ்வளவு கேவலமானவள்! ... என் நெஞ்சு பதைக்கிறது.

அவள் பார்வையில் படாதவாறு ஒதுங்கி மர நிழலில் ஒண்டுகிறேன்.

இருபது அடி தூரம் நடந்திருப்பாள். அவள் முன் வழக்கமாய் என் பார்வையில் படுகிற சிங்காரி எதிர்ப்பட்டாள்.

"நில்லு! நீ யாரு?" என்று அவள் கேட்கிறாள். பிறகு உச்சி முதல் உள்ளங்கால் வரை பிச்சைக்காரியைப் பார்வையிட்டு "ம்... கட்டு மஸ்தான திரேகம்!" என்று முணு முணுக்கிறாள்.

"எங்கே போறே?..."—சிங்காரி கேட்கிறாள்.

"வயித்துப் பாடு நடக்கணுமே ......" பிச்சைக்காரி மெள்ளத் திரும்பி குருட்டுப் பிச்சைக்காரனைப் பார்த்துக் கொள்கிறாள்.

"யாரு. ஒம் புருசனா அந்தக் குருட்டுப் பிச்சை?"

அரச மரத்தடி சிங்காரியின் கேள்விக்கு "ஆமாம். என் புருசன் தான் என்பதா — இல்லை சற்று முன்பு அந்தப் பந்தத்தை அவனே அறுத்துக்கொண்டு விடுதலை தந்து விட்டான் என்று கூறுவதா? பிச்சைக்காரி பதில் சொல்லவில்லை. சிங்காரி கேட்டாள்: "நீ என்ன ஊமையா?"

"இல்லே!" என்று தலையாட்டுகிறாள் பிச்சைக்காரி.

"நீ வயிறுரச் சாப்பிடலாம். நல்ல நல்ல புடவை கட்டிக்கலாம். நகை மணிகள் போட்டுக்கிடலாம். நான் சொல்றபடி கேட்பியா?..."

பிச்சைக்காரியின் கண்கள் விரிகின்றன.

வயிறு நிறையச் சாப்பாடு—புடைவை, நகைகள்—ஓ! ... இனி பிச்சையெடுக்கவேண்டாம். கண்ட இடத்தில், குளிரில் படுத்துக் கஷ்டப்பட வேண்டாம் — அதற்கு இவள் சொல்கிறபடி கேட்க வேண்டுமாமே—என்ன சொல்லப் போகிறாள், நான் என்ன செய்ய வேண்டும்?...

பிச்சைக்காரியின் மனதில் நிறைய கறி காய்களுடன் உணவு, வித விதமான புடவைகள், பளபளக்கும் நகைகள்—வரிசையாய் காட்சியளிக்கின்றன. அவள் திணறுகிறாள். "அதுக்கு ... அதுக்கு ... நான் என்ன செய்யணும்?"

"நான் சொல்றபடி கேட்கணும்! என்னோடு வரணும்!"

"வந்து...?"

அரச மரத்தடி சிங்காரி அவளிடம் மெல்லிய குரலில் ஏதோ சொல்கிறாள். என்ன செய்தால் அந்த வளமான வாழ்வு கிட்டும் என்பதைச் சொன்னாள். பிச்சைக்காரி நிதானமாக அவளிடம் கேட்டாள். "நீ சொல்கிறபடி கேட்டால் நகை நட்டு புடவை - சோறு எல்லாம் நிறையக் கிடைக்கும். இல்லையா?..."

"நிச்சயமா, நீ வேணுமின்னா இந்தக் குருட்டுப் பிச்சைக்காரனுக்கு ஒரு முழுக்குப் போட்டுட்டு என்னோட வாயேன்! நான் அந்த உலகததை உனக்குக் காட்டறேன்..."

பளாரென்று ஒரு அறை! பொறி கலங்கியிருக்கும்...

பிச்சைக்காரியின் வலுவான கரம் அரச மரத்தடி சிங்காரியின் பவுடர்க் கன்னத்தில் விளையாடியது. அடுத்த கணம் அவள் புயலெனச் சீறினாள்.

"சீ! நீயும் மனுசப் பொறவி தானா? நாங்கதான் வயித்துக் கொடுமை — மரியாதையை விட்டுப் பிச்சை எடுக்கிறோம். அதுக்காக ஒங்களைப்போல மானத்தை வித்திட்டுப் பிச்சை எடுக்கலையே! நீ எடுக்கறதும் பிச்சைதான். நானும் பிச்சை எடுக்கறவதான். ஆனா. ஒன்னைவிட நான் ஒரு படி மேலேதான் இருக்கேன்! நீ சொன்னியே, நல்ல சாப்பாடு, நகை நட்டு புடவை அப்படி இப்படின்னு, அது வேணுமின்னா உடம்பைத் திருப்தி பண்ணும். ஆனா, மனசை அதுனாலே திருபதி பண்ண முடியுமா?... சொல்லு...ஒரு புருசனுக்கு அடிமையா வாழ்ந்து பாரு — அப்ப தெரியும் அதோட சொகம்—அருமை எல்லாம்...!"

விக்கித்துப் போய் நிற்கிறாள் அரச மரத்தடி சிங்காரி. அவளது கரம் கன்னத்தைப் பிடித்தபடி இருக்கிறது. "நாங்க மரியாதையை விட்டுப் பிச்சை எடுக்கிறோம்...... நீங்க மானத்தை வித்துப் பிச்சை எடுக்கறீங்க.........அது உடம்பை வேணுமின்னா திருப்தி பண்ணும் —மனசைத் திருப்தி பண்ணுமா சொல்லு!" — பிச்சைக்காரி மொழிந்த ஆவேச வார்த்தைகள் அவள் காதில் திரும்ப ஒலிக்கின்றனவோ!...

பிச்சைக்காரி குருட்டுப் பிச்சைக்காரனுக்கு அருகில் ஓடுகிறாள். ஆவேசம் வந்தவள் போல் கத்துகிறாள். "தே! நீ என்ன சொன்னாலும் சரி, நான் உன்னை விட்டுப் போக மாட்டேன். உன் கால் என்ன, கைகளும் போயிட்டாக் கூட எனக்குக் கவலையில்லே...ஆனா, உன்னோடதான் வாழுவேன். நீதான் எனக்கு எல்லாம்!.........நீ என்னவோ பெரிசா சத்தியம் செய்துட்டே, இதோ பாரு ... அதை விடப் பெரிய சத்தியம் நான் செய்யப்போறேன். ஒன்னைவிட்டு நான் எங்கேயும் போகமாட்டேன்...... போவவே மாட்டேன் இது சாமி சத்தியம்..." என்று வெறிக் குரலில் அவள் கூச்சல் போடுகிறாள். தேம்பித் தேம்பி அழுகிறாள்.

நான் வீடு நோக்கி நடக்கிறேன். கொஞ்சநேரம் அமைதி...

திடீரென்று அந்தத் தெருவே அதிரும்படி பிச்சைக்காரியின் அலறல் சப்தம் கேட்கிறது.

சே! இதென்னடா பெரிய தொல்லையாப் போச்சு!" என்று எரிச்சலுடன் கதவைத் திறந்து கொண்டு சிலர் தெருவில் எட்டிப் பார்த்தார்கள்.

"வேறு ஒன்றுமில்லே. அரசமரத்தடி குருட்டுப் பிச்சைக்காரன் செத்துட்டான் அவ்வளவுதான்!" யாரோ யாரிடமோ சொன்னார்கள்.

'அவ்வளவுதானா?' - என் இதயம் விம்முகிறது.

"உன்னை விட்டுப் போகமாட்டேன்னு சொன்னேனே என் ராசா! அதனாலேதான் என்னைவிட்டுட்டு நீங்க போயிட்டீங்களா?..." என்று பிலாக்கணம் வைத்துக் கதறிக் கொண்டிருந்தாள் அவள்.

அதே சமயம்—

தெருக்கோடியில் எவனோ ஒரு முன்பின் தெரியாதவனின் ரூபாய் களை வாங்கிக்கொண்டு அவனில் தன்னைப் புதைத்துக்கொள்வதற்காக இருட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்த அரசமரத்தடி சிங்காரி மங்கலாய் என் கண்ணில் தெரிந்தாள்.

★

தமிழ்நாடு அரசு வெளியிடும் பாதுகாப்பு நிதிச் சிறப்புப் பரிசுச் சீட்டுகள் வாங்குவீர்!

டிக்கட்டுகளின் விலை ரூ. 100, ரூ. 10, ரூ. 5 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பரிசுகளின் விபரம் (ஒவ்வொரு வரிசைக்கும்)

ஒரு முதல் பரிசு	ரூ. 3 லட்சம்
ஒரு இரண்டாவது பரிசு	ரூ. 2 லட்சம்
ஆறு மூன்றுவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 50,000 வீதம்	ரூ. 3 லட்சம்
	ரூ. 8 லட்சம்

குலுக்கல் நாள்: 15-3-1972

வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9
கடிதத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2